


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ நவம்பர். 22, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 48 ❖ ரூ.10

### "பேரியம் நைட்ரேட் கொண்டு பட்டாசு தயாரிக்க அனுமதிக்க வேண்டும்"

# கோரிக்கை

## 8 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க பட்டாசு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் : பட்டாசு உற்பத்தியாளர்கள்

சிவகாசி , நவ. 22-

**8 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க பட்டாசு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம், பட்டாசு உற்பத்தியாளர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.**



தமிழ்நாடு பட்டாசு மற்றும் கேப் வெடி உற்பத்தியாளர் சங்கம் (டான்பமா) தலைவர் கணேசன் அளித்த மனுவில், "பட்டாசுக்கான ஜிஎஸ்டி வரி 28 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைத்ததற்காகவும், சட்ட விரோத பட்டாசு இறக்குமதியை தடை செய்ய நடவடிக்கை எடுத்ததற்காகவும் நன்றி. கடந்த செப்டம்பர் 22-ம் தேதி உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், பேரியம் நைட்ரேட்டைப் பயன்படுத்தி இணைப்பு பட்டாசுகளை (சரவெடி) தயாரிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், தற்போது பட்டாசு ஆலைகளில் 40 சதவீத பட்டாசுகளை மட்டுமே உற்பத்தி செய்யும் நிலை உள்ளது. இதனால் பட்டாசு தொழிலை நம்பி உள்ள பல லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பின்தங்கிய 112 மாவட்டங்களில் ஒன்றாக விருதுநகர் உள்ளது. மாவட்டத்தின் பிரதான பட்டாசு தொழில் இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. பேரியம் நைட்ரேட் மட்டுமே பச்சை நிறத்தை உருவாக்குகிறது. இன்று வரை பேரியம் நைட்ரேட்டுக்கு வேறு மாற்று இல்லை. உலகில் வேறு எந்த நாடும் பட்டாசு உற்பத்தியில் பேரியம் நைட்ரேட் பயன்பாட்டை தடை செய்யவில்லை. வெடி பொருள் கட்டுப்பாட்டு துறை கடந்த 2018-ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமான பத்திரத்தில் பேரியம் நைட்ரேட் பயன்படுத்தாமல் 50 முதல் 60 சதவீத பட்டாசுகளை உற்பத்தி செய்ய முடியாது என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் பட்டாசு உற்பத்திக்கு எதிராக மனு செய்தவரின் தவறான விண்ணப்பங்கள் மூலம், உச்சநீதிமன்றம் பேரியம் நைட்ரேட், விஷ வாயுக்களை வெளியிடுவதாகக் கூறி, அவற்றைக் கொண்டு பட்டாசு உற்பத்தி செய்வதற்கு தடை விதித்துள்ளது.

பட்டாசு குழாயின் அளவை குறைத்து, குறைந்த அளவிலான வேதிப்பொருளை பயன்படுத்தி, சிஎஸ்ஐஆர் - நீரி வழிகாட்டுதலில் தயாரிக்கப்பட்ட இணைப்பு பட்டாசுகளில், புகை வெளியீடு 30 சதவீதம் வரை குறைவாக உள்ளது கண்டறியப்பட்டது. புதிய ஃபார்முலா படி பின்னப்பட்ட இணைப்பு பட்டாசுகளில் ஒலி அளவு 125 டெசிபலுக்கும் குறைவாக உள்ளது என்பது சிஎஸ்ஐஆர் - நீரி நடத்திய சோதனையில் உறுதியாகி உள்ளது. இதுகுறித்த அறிக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சிஎஸ்ஐஆர்- நீரி சார்பில் குறைந்த அளவிலான பேரியம் நைட்ரேட் பயன்படுத்தி இணைப்பு பட்டாசுகளை உற்பத்தி செய்ய அனுமதி அளிப்பதே இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையும்.

8 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரமாக உள்ள பட்டாசு தொழில் இன்று இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. இந்த கோரிக்கையை அவசரத் தேவையாக கருதி தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க பட்டாசு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பட்டாசு வணிகர்கள் கூட்டமைப்பு மாநில தலைவர் ராஜா சந்திரசேகர் அளித்த மனுவில், "பண்டிகை காலங்களில் மாசு கட்டுப்பாட்டு சட்டத்தில் விலக்கு அளிக்கவேண்டும். பட்டாசு கடைகளுக்கு மாதிரி சட்டம் உருவாக்க வேண்டும். பட்டாசுக்கான ஜிஎஸ்டி வரியை 12 சதவீதமாக குறைக்க வேண்டும். பட்டாசு தொழில் நல வாரியம் ஏற்படுத்த வேண்டும்" என கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த சந்திப்பின்போது, பாஜக பொதுச் செயலாளர் இராம. சீனிவாசன் உடன் இருந்தார்.

### "அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை எட்ட

## மாநிலப் பட்டியலுக்கு கல்வியை மாற்ற வேண்டும்"

## முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, நவ. 22-

"ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்றினால்தான், அனைவருக்கும் கல்வி, உயர் கல்வி என்ற இலக்கை மாநிலங்களை எட்ட முடியும். நான் தமிழகத்துக்காக மட்டும் இதைக் கூறவில்லை, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்துதான் கூறுகிறேன்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார். மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிய முதல்வர் ஸ்டாலின் அந்த விழாவில் பேசியதாவது: "என்னுடைய தாத்தா முத்துவேலர், பாட்டு எழுதுவதில் மட்டுமல்ல, பாட்டு பாடுவதிலும் வல்லவர். அதேபோல், தலைவர் கருணாநிதியும் கவிதைகள் மட்டுமல்ல, நிறைய சினிமா பாடல்களையும்கூட எழுதியிருக்கிறார். அவர் பாட்டு பாடியது இல்லையே தவிர, அனைத்து இசை நுணுக்கங்களும் அவருக்கு நன்றாகத் தெரியும். ஒரு இசையைக் கேட்டவுடனே, அதில் எது சரி, எது தவறு என்பதை கூறிவிடுவார். அந்த அளவுக்கு வல்லமைப் பெற்றவர் அவர்.

அடுத்து, "விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே" உள்ளிட்ட பாடல்களைப் பாடியவர் என்னுடைய மாமா தமிழிசை சித்தர் சிதம்பரம் ஜெயராமன். அந்தவகையில் எனக்கு இசையோடு நெருங்கிய உறவு இருக்கிறது. இந்தியாவிலேயே இசைக்காக உருவாக்கப்பட்ட ஒரே பல்கலைக்கழகம் என்ற பெருமை இந்த பல்கலைக்கழகத்துக்குத்தான் உண்டு. முழுக்க முழுக்க மாநில அரசு நிதியுதவியில் செயல்படும் பல்கலைக்கழகம் இது. அதைவிட சிறப்பு என்னவென்றால், இந்த பல்கலைக்கழகத்துக்குத்தான், மாநிலத்தை ஆளும் முதல்வரே வேந்தராக இருக்கும் உரிமை உள்ளது. நான் அரசியல் எல்லாம் பேசவில்லை. எதார்த்தத்தைப் பேசுகிறேன்.

இப்படி முதல்வர்களே வேந்தர்களாக இருந்தால்தான், பல்கலைக்கழகங்கள் சிறப்பாக வளர முடியும், வளரும். மற்றவர்கள் கையில் இருந்தால், அதன் நோக்கமே சிதைந்துப் போய்விடும் என்று நினைத்துதான், 2013-ம் ஆண்டே, இந்த பல்கலைக்கழகத்தோட வேந்தர், முதல்வர்தான் என்று அன்று ஆட்சியில் இருந்த மறைந்த முதல்வர் ஜெயலலிதா முடிவு செய்துள்ளார். இதற்காக அவரை மனதார பாராட்டலாம். நானும் மனமுவந்து பாராட்டுகிறேன்.

இசைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், பத்மபூஷண் பி.சுசிலா, சுந்தரம் என இரண்டு இசை மேதைகளுக்கு டாக்டர் பட்டம் வழங்கி பெருமைப்படுத்தியிருக்கிறோம். இதன் மூலம் டாக்டர் பட்டமும் பெருமை அடைகிறது. பாடகி சுசிலாவின் குரலில் மயங்காதவர்களே இருக்க முடியாது. அதில் நானும் ஒருவன். அவருடைய பாடல்களை வெளியூர் பயணங்களின்போது காரில் போட்டுக் கேட்பேன். எனக்கு மிகவும் பிடித்த பாடல், "நீ இல்லாத உலகத்திலே... நிம்மதி இல்லை". தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் புகழ்பெற்றவர் பாடகி சுசிலா. அதேபோல் இசையியல் அறிஞர் சுந்தரம் பன்முகத் திறமை கொண்டவர். மிகப்பெரிய இசைக் குடும்பத்தில் பிறந்து, இசைத்துறைக்கு அரிய தொண்டாற்றி வருபவர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், இந்த பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் இருப்பதால்தான், மக்கள் எண்ணத்தைப் பிரதிபலிப்பது போன்ற இதுபோன்ற முடிவுகள் எடுக்க முடிகிறது. அதனால்தான், அனைத்து பல்கலைக்கழகங்களின் வேந்தராகவும் முதல்வரே இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். அதற்கான சட்ட முன்வடிவுகளையும் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறோம். இது தொடர்பான சர்ச்சைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. உச்ச நீதிமன்றம் இது தொடர்பான வழக்கை விசாரித்த வருகிறது. நல்ல செய்தி வரும், என்று எதிர்பார்ப்போம். வரவேண்டும் என்று எதிர்பார்ப்போம்.

மாநில அரசின் உரிமைகளை நிலைநாட்டு வகையில், நீதிபதிகள் அதில் கருத்துகளை கூறியுள்ளனர். ஒத்திசைவுப் பட்டியலில் உள்ள கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்றினால்தான், அனைவருக்கும் கல்வி, உயர் கல்வி என்ற இலக்கை மாநிலங்களை எட்ட முடியும். நான் தமிழகத்துக்காக மட்டும் இதை கூறவில்லை, இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்துதான் இவ்வாறு கூறுகிறேன். கல்விதான் ஒருவருடைய நியாயமான சொத்து. அந்த கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு எந்த தடையும் இருக்கக்கூடாது என்பதுதான், நமது திராவிட மாடல் ஆட்சியினுடைய கொள்கை.

நலிந்த நிலையில் இருக்கும் மரபுவழிக் கலைகள், பண்டைய தமிழ்ப் பண்பாட்டை பிரதிபலிக்கும் கலைகள், அந்த கலைகளைப் புதுப்பித்து, வருங்கால தலைமுறைகளிடம் இந்த கலைகளைக் கொண்டு செல்லும் வகையில் இந்த பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. அதற்கான முழு ஒத்துழைப்பையும் மாநில அரசு அளித்து வருகிறது. மாற்றுத்திறனாளிகள் பலரும், இந்த பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்ற கல்லூரிகளில் இசை மற்றும் கவின்கலைகளைக் கற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் சமூகநீதியை காக்கும் பல்கலைக்கழகமாக இந்த பல்கலைக்கழகம் அமைந்துள்ளது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

## உசிலம்பட்டி முன்னாள் எம்எல்ஏ மகேந்திரன் அதிமுகவில் இணைப்பு

## ஆர்.பி.உதயகுமார் முயற்சிக்கு கிடைத்த வெற்றி

மதுரை, நவ. 22-

உசிலம்பட்டி தொகுதி முன்னாள் எம்எல்ஏ ஐ.மகேந்திரன் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் முயற்சியால் அதிமுகவில் இணைந்தார். இது அமமுக உள்ளிட்ட பல்வேறு தரப்புக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவரை திமுகவில் சேர்க்கும் நல்ல வாய்ப்பை அக்கட்சி கோட்டை விட்டுள்ளதாக அக்கட்சியினர் ஆதங்கப்படுகின்றனர்.

உசிலம்பட்டியைச் சேர்ந்தவர் ஐ.மகேந்திரன். இவர், அமமுக தலைமைக் கழக செயலாளர், மதுரை புறநகர் மாவட்ட செயலாளராக இருந்தார். 2006-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் உசிலம்பட்டி தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். டிடிவி. தினகரன் புதிய கட்சி துவங்கியதும் அக்கட்சியில் இணைந்தார். 2019-ம் ஆண்டு திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலில் அமமுக சார்பில் போட்டியிட்ட மகேந்திரன் 31199 (13.80%) வாக்குகளை பெற்றார். இதனால் அங்கு அதிமுக தோற்று, திமுக வென்றது. 2021 சட்டப்பேரவை தேர்தலில் உசிலம்பட்டில் அமமுக வேட்பாளராக போட்டியிட்ட மகேந்திரன் 55491 (26.11%) வாக்குகளை பெற்றார்.

இதனால் திமுக கூட்டணி வேட்பாளர் கதிரவன் தோற்று, அதிமுக வேட்பாளர் அய்யப்பன் வென்றார். இப்பகுதியில் தனக்கென தனி செல்வாக்குடன் இருப்பவர் என்பதை அடுத்தடுத்த தேர்தலில் நிரூபித்தவர். டிடிவி தினகரனின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவராக திகழ்ந்தார். இவர் ஞாயிற்றுக்கிழமை திடீரென அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார். முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் மிகவும் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி இந்த இணைப்பை முன்னின்று நடத்தியுள்ளார். இது இப்பகுதியைச் சேர்ந்த அமமுக மட்டுமின்றி பல்வேறு அரசியல் கட்சியினர், அமைப்பினரிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இது குறித்து மகேந்திரனுக்கு நெருக்கமானர்கள் கூறுகையில், "2 தேர்தல்கள், பல ஆண்டுகள் என கட்சிக்காக சொந்த பணத்தை தொடர்ந்து செலவிட்டு வந்தார். இனியும் கட்சியால் எதிர்காலம் இருக்குமா என்ற சந்தேகம் வலுவானது. இந்த சூழலில் சில உறுதிமொழியின் அடிப்படையில் அதிமுகவில் இணைய உதயகுமார் பேச்சு நடத்தியதன் மூலம் அதிமுகவில் இணைந்து விட்டார்" என்றனர்.

"ஆர்.பி.உதயகுமாரின் சமீபத்திய மிக முக்கியமான ராஜதந்திர அரசியல் நடவடிக்கை இது. தென் மாவட்டங்களில் முக்குலத்து சமூகத்தினரில் சிலர் அதிமுகவிற்கு எதிராக உள்ளதாக தகவல் பரப்பப்படுகிறது. இது தவறு என்பதை காட்ட தேவர் ஜெயந்திக்கு அதிமுக பொதுச்செயலாளர் கே.பழனிசாமி வந்து சென்றார். இந்த சூழலில் உசிலம்பட்டியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர், முக்குலத்து சமூகத்தை சேர்ந்தவர், டிடிவி.தினகரனின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவர் அதிமுகவில் இணைந்தது பலருக்கும் அதிர்ச்சியையும், ஆச்சர்யத்தையும் அளித்துள்ளது.

இதன் மூலம் முக்குலத்தோர் அதிமுகவிற்கு எதிராக இல்லை என்பதையும், இதை உசிலம்பட்டி என்ற முக்கிய ஊரிலிருந்து நிரூபிக்கும் வகையில் இந்த இணைப்பு வெற்றிகரமாக நடந்துள்ளது. இதன் மூலம் தனக்கு நம்பிக்கை துரோகம் செய்துவிட்டு ஓபிஎஸ்சுடன் இணைந்த அய்யப்பன் எம்.எல்.ஏ-வுக்கும் செக் வைத்துள்ளார் உதயகுமார். எம்பி தேர்தலில் சீட், இதிலும் தோற்றால் 2026 சட்டப்பேரவை தேர்தலில் உசிலம்பட்டி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு, 2 சட்டப்பேரவை தொகுதிகளாக பிரித்து மாவட்ட செயலாளர் பதவி என்ற 3 உறுதி மொழிகள் அதிமுக தரப்பில் வழங்கப்பட்டுளளதாக தகவல்.

எம்பி தேர்தலில் ஓபிஎஸ் மகன் ரவீந்திரநாத் போட்டியிட்டால், அவருக்கு பதிலடி தர மகேந்திரன் சரியான தேர்வாக இருப்பார். அதிமுக நிர்வாகிகளுக்குக் கூட தெரியாமல் மிகவும் ரகசியமாக மகேந்திரனின் இணைப்பு நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது அமமுக-விற்கு இழப்பு என்பதைவிட தனக்கு எதிரானவர்களுக்கு பாடம் கற்பிப்பு, ம்க்குலத்தோரின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது, எம்.பி, எம்.எல்.ஏ தேர்தலில் சரியான வேட்பாளர் தேர்வு என பல்வேறு விசயங்களில் மகேந்திரனின் சேர்க்கை அதிமுகவின் வெற்றியாக பார்க்கப்படுகிறது" என்றனர்.

"மகேந்திரன் செல்வாக்கால் உசிலம்பட்டி ஒன்றியத்தில் 2019-ல் நடந்த உள்ளாட்சி தேர்தலில் 2 பேர் வென்றனர். இவர்கள் தயவில்தான் திமுக ஒன்றிய தலைவர் பதவியை கைப்பற்றியது. உசிலம்பட்டி நகராட்சி தலைவர் பதவிக்குகூட முதல்வர் அறிவித்த வேட்பாளரை வெற்றி பெற வைக்க முடியவில்லை. மகேந்திரனை திமுகவில் சேர்க்க 2021 தேர்தலுக்கு முன்பு பேச்சு நடந்தது. அப்போது மகேந்திரன் ஒப்புக்கொள்ளவில்லை. தற்போதைய சூழலை நன்றாக பயன்படுத்தி திமுகவில் சேர்த்திருந்தால் உசிலம்பட்டி பகுதியில் திமுக மேலும் வலுவாகியிருக்கும். அவரை கோட்ட விட்டதில் திமுகவிற்கு இழப்பு தான்" என்றனர்.

"எங்களுக்கு மிகப் பெரிய இழப்பு என்பதால் சந்தேகமே இல்லை. கட்சி தனது செயல்பாடுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதையே இது உணர்த்துகிறது" என்றார்.

## பாமாயில், பருப்பு கொள்முதல் டெண்டருக்கு தடை கோரிய மனு தள்ளுபடி

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, நவ. 22-

பொது விநியோகத் திட்டத்துக்காக 6 கோடி பாக்கெட் பாமாயில் கொள்முதல் செய்வதற்கான டெண்டருக்கு தடை விதிக்கக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பொது மக்களுக்கு வழங்குவதற்காக, ஒரு லிட்டர் அளவில் 6 கோடி பாக்கெட்டுகள் பாமாயில் கொள்முதல் செய்வதற்காக, நவம்பர் 8-ம் தேதி மின்னணு டெண்டர் கோரப்பட்டது. இந்த டெண்டரை ரத்து செய்யக் கோரியும், டெண்டருக்கு தடை விதிக்க கோரியும் மதுரையைச் சேர்ந்த ஸ்ரீதர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனுவில், ஒளிவுமறைவற்ற டெண்டர் சட்ட விதிகளின்படி, 2 கோடி ரூபாய் வரை மதிப்பிலான டெண்டர்களுக்கு விண்ணப்பிக்க 15 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும். 2 கோடி ரூபாய்க்கு மேலான டெண்டர்களுக்கு 30 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும். ஆனால் 2 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள பாமாயில் டெண்டருக்கு விண்ணப்பிக்க நவம்பர் 22-ம் தேதி வரை மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இது சட்ட விதிகளுக்கு எதிரானது என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.கே.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசுத்தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முகசுந்தரம், எதிர்வரும் கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகைகளுக்காக குறுகிய கால டெண்டர் கோரப்பட்டுள்ளது. அதற்கு சட்ட விதிகள் வழிவகை செய்கிறது என, விளக்கம் அளித்தார்.


அரசுத்தரப்பு வாதத்தைப் பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், அவசர தேவைக்காக குறுகிய கால டெண்டர் கோர விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளின் ஒப்புதலைப் பெற்று தான் இந்த டெண்டர் கோரப்பட்டுள்ளது எனக்கூறி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

இதேபோல 60,000 மெட்ரிக் டன் துவரம் பருப்பு கொள்முதல் தொடர்பான டெண்டரை எதிர்த்த வழக்கையும் தலைமை நீதிபதி அமர்வு தள்ளுபடி செய்துள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







### “ஜம்மு காஷ்மீரில் 14 மணி நேரம் மின்வெட்டு

## துரோகம் இழைக்கப்படுகிறது”

## மத்திய அரசை சாடிய ஓமர் அப்துல்லா

புதுடெல்லி : நவ. 22-

ஜம்மு-காஷ்மீரில் 14 மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகிறது என்றும் மத்திய அரசு ஜம்மு-காஷ்மீருக்கு துரோகம் இழைத்துருக்கிறது என்றும் அம்மாநிலத்தின் முன்னாள் முதலவர் ஒமர் அப்துல்லா குற்றம்சாட்டியுள்ளார்.

குல்காமில் நடந்த பேரணியில் ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஒமர் அப்துல்லா இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசியதாவது, “நாங்கள் ஏமாந்து போகிறோம். தேர்தல், வேலைவாய்ப் பின்மையை தீர்ப்போம், வளர்ச்சியடையச் செய்வோம் என்ற பெயரில் ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு மத்திய அரசால் துரோகம் இழைக்கப்படுகிறது.



இது நாள் வரை மின்வெட்டுக்கு தீர்வு காணப்படாதது ஏன்? இன்று, பணம் ஏராளமாக இருப்பதாகக்கூறுகிறார்கள். அப்படி இருக்கும்போது, 14 மணிநேரமும் மின்வெட்டு ஏற்படுவதற்கான காரணம் என்ன?

காஷ்மீரில் பல்வேறு மனப்பான்மை கொண்டவர்கள் இருக்கிறார்கள் என்றால், அதற்கு 370-வது பிரிவுதான் காரணம். 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்ட பிறகு, காஷ்மீரில் இயல்பு நிலை இல்லை. 370 வது பிரிவை ரத்து செய்தால், துப்பாக்கி சண்டைகளில் இருந்து நிவாரணம் கிடைக்கும் என்று மத்திய அரசு உறுதியளித்தது. ஆனால், இந்த பகுதியில் துப்பாக்கிச்சண்டை நடைபெற்று ஒருவாரம் கூட ஆகவில்லை. 5 பேர் என்கவுன்ட்டரில் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களை பயங்கரவாதிகள் என்று அரசே தெரிவிக்கிறது. நீங்கள் ஜம்மு-காஷ்மீர் மக்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்களையும் ஏமாற்றிவிட்டீர்கள்" என்று கூறினார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ஜம்மு- காஷ்மீர் முன்னாள் முதல்வரும், பிடிபி தலைவருமான மெகபூபா முப்தியும் ஜம்மு காஷ்மீரில் நிலவும் மின் நெருக்கடி குறித்து கடும் கவலை தெரிவித்தார்.

### “மருத்துவத்துறைக்கே பேரிழப்பு”

## சங்கர நேத்ராலயா நிறுவனர் எஸ்.எஸ். பத்ரிநாத் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி

சென்னை, நவ. 22-

"சங்கர நேத்ராலயா மருத்துவமனை நிறுவனரும் புகழ்பெற்ற கண் மருத்துவருமான எஸ்.எஸ்.பத்ரிநாத் மறைந்தார் என்றறிந்து வேதனையடைந்தேன். எண்ணற்ற மக்களுக்குக் கண்ணொளி பாய்ச்சிய பத்ரிநாத்தின் மறைவு மருத்துவத்துறைக்கே பேரிழப்பு" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "சங்கர நேத்ராலயா மருத்துவமனை நிறுவனரும் புகழ்பெற்ற கண் மருத்துவருமான எஸ்.எஸ். பத்ரிநாத் மறைந்தார் என்றறிந்து வேதனையடைந்தேன்.

அமெரிக்காவில் உயர்படிப்புகளை முடித்து,



இந்தியாவில் குறைந்த செலவில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற சேவை நோக்குடன் பத்ரிநாத் தொடங்கிய சங்கர நேத்ராலயா மருத்துவமனை பல்கிப் பெருகிஇன்றுநாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. இத்தகைய சேவைக்காக இந்திய அரசால் வழங்கப்படும்'பத்மபூஷண்' விருதினையும் மருத்துவர் பத்ரிநாத் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கர நேத்ராலயா மூலம் பத்ரிநாத் ஆற்றி வரும் பணிகளைப் பற்றி அறிந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் நானி பல்கிவாலா பெரும் நிதியுதவியை அந்த மருத்துவமனைக்கு அளித்ததுடன், பின்னர் தனது சொத்துகள் அனைத்தையும் சங்கர நேத்ராலயாவுக்கு எழுதி வைத்தார் என்பதன் மூலம் இத்துறையில் பத்ரிநாத் பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறியலாம். எண்ணற்ற மக்களுக்குக் கண்ணொளி பாய்ச்சிய பத்ரிநாத்தின் மறைவு மருத்துவத்துறைக்கே பேரிழப்பு.

எஸ்.எஸ்.பத்ரிநாத்தை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் மருத்துவத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்", என்று முதல்வர் தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.




## திறன் மேம்பாட்டு நிதி முறைகேடு வழக்கில் சந்திரபாபு நாயுடுவுக்கு ஜாமீன்


விஜயவாடா : நவ. 22,

தெலுங்குதேசம் கட்சியின் தலைவரும் ஆந்திர முன்னாள் முதல்வருமான சந்திரபாபு நாயுடுவின் ஆட்சிக் காலத்தில் திறன் மேம்பாட்டு நிதியில் ரூ.371 கோடி முறைகேடு நடந்துள்ளதாக புகார் எழுந்தது. இது தொடர்பான வழக்கில் சந்திரபாபுவை ஆந்திர சிஐடி போலீஸார் கடந்த செப்டம்பர் 9-ம் தேதி கைது செய்தனர்.

பின்னர் மருத்துவ காரணங்களுக்காக சந்திரபாபுக்கு ஆந்திர உயர் நீதிமன்றம் கடந்த அக்டோபர் 31ம் தேதி இடைக்கால ஜாமீன் வழங்கியது. இதையடுத்து 53 நாட்களுக்குப் பிறகு சிறையில் இருந்து சந்திரபாபு விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவரது ஜாமீன் மனு ஆந்திர உயர் நீதிமன்றத்தில் நீதிபதி மல்லிகார்ஜுன ராவ் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, “ஒரு துறையில் தவறு நடந்தால், அதற்கு முதல்வர் நேரடியாக பொறுப்பாக மாட்டார். ஒருவேளை பொறுப்பு என்றால் அதற்கான ஆதாரங்களை சிஐடி போலீஸார் இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

ஜாமீன் வழங்கினால், அவர் சாட்சிகளை கலைத்து விடுவார் என்ற வாதம் சரியல்ல. ஏனெனில் இத்தனை காலம் அவர் வெளியில்



இருந்துள்ளார். சுமார் 3 ஆண்டுகளுக்கு பிறகுதான் இந்த வழக்கையே பதிவு செய்கிறீர்கள். எனவே அவர் வெளியில் இருந்து சாட்சிகளை கலைத்து விடுவார் என்பது நம்ப முடியாதது ஆகும். அவருக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒருவர் வெளிநாடுகளுக்கு தப்பிவிடுவார் என்று கூறுவதும் சரியல்ல” என்று தெரிவித்தார்.

இதையடுத்து சந்திரபாபுவுக்கு ரெகுலர் ஜாமீன் வழங்கி நீதிபதி உத்தரவிட்டார். மேலும் வரும் 29-ம் தேதிக்கு பிறகு அரசியல் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

சந்திரபாபுவுக்கு ரெகுலர் ஜாமீன் கிடைத்ததை தொடர்ந்து, ஹைதராபாத்தில் உள்ள அவரது வீட்டு முன் கட்சி நிர்வாகிகள் பட்டாசு வெடித்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். திருப்பதி அலிபிரி அருகே தெலுங்குதேசம் கட்சியினர் 108தேங்காய்களை உடைத்து சுவாமிக்கு நேர்த்திக் கடன் செலுத்தினர். ஆந்திர மாநிலம் முழுவதும் பல ஊர்களில் தெலுங்குதேசம் கட்சியினர் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

## 2024 நாடாளுமன்ற தேர்தலில் அடிமைகளின் எஜமானர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

ஈரோடு : நவ. 22,

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அடுத்த சரளை பகுதியில் ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட திமுக சார்பில் திமுக மூத்த முன்னோடிகள், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்பட 2,600 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் மதிப்பிலான பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

இதில், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுமேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொற்கிழிகளை வழங்கி பேசியதாவது:

ரத்தம் சிந்தி உழைத்த மூத்த முன்னோடிகளான தாத்தா, பாட்டி ஆகியோருக்கு ஒரு பேரனாக என் கடமையை



செய்வதாக கருதுகிறேன். டிசம்பர் 17ல் சேலம் இளைஞரணி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் மூத்த முன்னோடிகள் குடும்பத்துடன் கலந்து கொள்ள வேண்டும். சமீபத்தில் மதுரையில் அதிமுகவினர் மாநில மாநாடு நடத்தினர். ஒரு மாநாடு எப்படி நடத்தக்கூடாது என்பதை மதுரையில் நடத்திக் காட்டினர்.

சேலத்தில்நடைபெறும் மாநாடு என்பது, ஒரு மாநாடு எப்படி நடத்த வேண்டும் என்பதை நடத்தி காட்ட வேண்டும். கடந்த 2 ஆண்டுகளில் தேர்தலில் அறிவித்த அறிவிப்புகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 2021 சட்டமன்ற தேர்தலில், அதிமுக அடிமைகளை வீட்டுக்கு அனுப்பினீர்கள். வருகிற 2024 நாடாளுமன்ற தேர்தலில் அடிமைகளின் எஜமானர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இந்தியா என்ற ஒரு நாடு இருக்க வேண்டும் எனில், இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். இந்தியாவை காப்பாற்ற வருகிற 2024 நாடாளுமன்ற தேர்தலில் பாசிச பாஜ அரசை மக்கள் வீழ்த்த வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

## அப்பாவி மக்களின் சொத்துகளை வக்ஃப் வாரியம் ஆக்கிரமிப்பதை தடை செய்ய வேண்டும்

சென்னை, நவ. 22-

இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை:

வக்ஃப் சட்டம் பிரிவு 4-ன் கீழ் 2 முறை நில அளவைகள் செய்து ஆட்சேபனைகளை பரிசீலித்து, ஆட்சேபனை தாரர்களுக்கு உரிய வாய்ப்பு வழங்கி அவர்கள் தரப்பு ஆவணங்கள் வாதங்களை கேட்டு அனைத்து விவரங்களையும் மாநில அரசுக்கு அறிக்கையாக அனுப்பி மாநில அரசு ஒப்புதலுடனும் அனுமதியுடனும் மட்டுமே வக்ஃப் சொத்து என்று அறிவிக்கை செய்யவேண்டும் என்பது சட்டம்.



ஆனால் தமிழகத்தில் தொடர்ந்து எவ்வித ஆவணமும் இல்லாமல் சட்டத்தையும் விதிமுறைகளையும், நீதிமன்ற தீர்ப்புகளையும் கடைபிடிக்காமல் வக்ஃப் சொத்துஎன்று அறிவிக்கை வெளியிட்டு அப்பாவி மக்களின் சொத்தை ஆக்கிரமித்து அபகரிப்பது வாடிக்கையாகிவிட்டது. வேலூர், திருச்சி மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் திடீரென வக்ஃப் சொத்து என்று அறிவிக்கை செய்து உரிமை கோரிய விஷயத்தில் போராட்டம் வெடித்தது.

இதில் மாநில அரசு தற்காலிக தீர்வு செய்ததைபோல இல்லாமல், சேலம் கபர்ஸ்தான் நில பாதுகாப்பு கமிட்டி வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட வகையில் வக்ஃப் சொத்துகள் சம்பந்தமான நில உரிமை ஆவணங்கள், பதிவேடுகள் முழுவதும் யாரும் எளிதாக அணுகி ஆய்வு செய்யும் வகையிலும் ஆவணங்களை பதிவிறக்கம் செய்யும் வகையிலும் கணினி மயமாக்கப்படவேண்டும், எவ்வித ஆவணங்களும் இல்லாமல் முறைகேடாக வக்ஃப் சொத்து என்று அறிவித்து சொத்துகளை வக்ஃப் வாரியம் அபகரிப்பதை தடை செய்யவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## அமைச்சர் எ.வ.வேலு பதவி விலக வேண்டும் போராட்டத்தில் குதித்த விவசாயிகள்

திருவண்ணாமலை, நவ. 22-

திருவண்ணாமலையில் 6விவசாயிகள் மீது குண்டர் சட்டம் போடப்பட்டதை கண்டிக்கும் விதமாக தமிழகம் முழுவதும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் 23 சங்கங்களை சேர்ந்த விவசாய சங்கங்கள் பங்கேற்றன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை விரிவாக்கத்துக்காக 11 கிராமங்களில் 3200 ஏக்கர் விவசாய நிலங்களை கையகப்படுத்தும் பணி தொடங்கியது. விவசாய நிலங்களை கையகப்படுத்த முயற்சித்த தமிழக அரசை எதிர்த்து 126 நாட்கள் அமைதியான வழியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் போராட்டத்தை ஒருங்கிணைத்து நடத்திய 20 விவசாயிகளையும் காவல்துறையினர் கைது செய்தனர். இவர்களில் 7



பேர் திடீரென குண்டர் தடுப்புசட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்புகள் வெளியானது. இதற்கு கண்டனங்கள் எழுந்தன. கடந்த 18ம் தேதி சட்டசபை சிறப்பு கூட்டம் நடந்த நிலையில் விவசாயிகள் பிரச்சினையை பெரிதாக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து விவசாயிகள் மீதான குண்டர் சட்டம் ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்தது.

விவசாயிகள் மீது போடப்பட்ட குண்டர் சட்டத்தை எதிர்த்து விவசாய சங்கங்களை சேர்ந்தவர்கள் தமிழகத்தில் 24 மாவட்டங்களில் போராட்டம் நடத்தினர். அப்போது பேசிய அவர்கள், விவசாயிகளுக்கு ஆதரவாக இருப்பதாக கூறிய திமுக அரசு தங்களை வஞ்சித்துவிட்டதாகவும், உணவளிக்கும் விவசாயிகள் மீதே குண்டாஸ் சட்டத்தைப் போடும் அளவிற்கு துணிவிட்டதாக குற்றம்சாட்டினார்கள்.

மேலும் திருவண்ணாமலையில் விவசாயிகள் மீது குண்டாஸ் போட காரணமாக இருந்த அமைச்சர் எ.வ.வேலு உடனே பதவி விலக வேண்டுமென வலியுறுத்தினர். இந்த போராட்டம் தொடரும் என்றும் வரும் 29ம் தேதி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

## களைக்கட்டும் தீபத்திருவிழா : அண்ணாமலையார் கோயிலை சுத்தம் செய்த அமைச்சர்

திருவண்ணாமலை, நவ. 22-

திருவண்ணா மலை அண்ணாமலையார் தீபத்திருவிழா கடந்த 17ம்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய நிலையில், கிரிவலப்பாதையை அமைச்சர் எ.வ.வேலு சுத்தம் செய்தார்.

உலகப் பிரசித்தி பெற்ற விழாக்களில் ஒன்றாக கருதக்கூடிய திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோயிலின் திருக்கார்த்திகை தீபத் திருவிழா கடந்த 17ம் தேதி 64 அடி தங்க கொடிமரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில், வருகின்ற நவம்பர் 26ம் தேதி அதிகாலை



அண்ணாமலையார் கருவறை முன்பு 4 மணிக்கு பரணி தீபமும், அதனை தொடர்ந்து அன்று மாலை 2,668 அடி உயரம் கொண்ட தீபமலையின் மீது 6மணிக்கு மகா தீபமும் ஏற்றப்பட உள்ளது. இந்த விழாவினை காண தமிழகம் மட்டுமல்ல வெளி மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வருவது வாடிக்கை.

இந்ததீபத்திருவிழாவை முன்னிட்டு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டார். அப்போது கிரிவலப் பாதை சரியாக சீரமைக்கப்படாமல் இருந்ததைக் கண்டு கடிந்துக் கொண்டார். இந்த நிலையில் நேற்று காலை தானே களத்தில் இறங்கி, கார்த்திகை தீபத் திருவிழாவின் பிரதானமாக பார்க்கப்படும் 14 கிலோ மீட்டர் தூரம் உள்ள கிரிவலப் பாதையை அமைச்சர் சுத்தம்செய்தார். அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு உத்வேகம் அளிக்கும் விதமாக தானே களத்தில் இறங்கியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.



▶ மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவாக கடைபிடிக்கப்பட்டு இன்நிகழ்வின் மூன்றாம் நாளான நேற்று மாவட்ட நிர்வாகம் மற்றும் கல்வித்துறை சார்பில் தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் "பன்மொழி நல்லிணக்க நாள்" நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு துணை ஆட்சியர் ஜான்சன் தலைமை ஏற்றார். மேலும் இந்நிகழ்வில் மேல்நிலைப்பள்ளி துணை இயக்குனர் ராஜேஸ்வரி பள்ளியின் துணை முதல்வர் பாஸ்கரன் மற்றும் ஆசிரிய பெருமக்கள் 300-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். நிகழ்வில் மேல்நிலைக் கல்வித் துணை இயக்குனர் ராஜேஸ்வரி அனைவரையும் வரவேற்று இந்திய ஒற்றுமையின் சிறப்புகள் குறித்து பேசினார். மேலும் இந்நிகழ்வினை துவக்கி வைத்தார் துணை ஆட்சியர் ஜான்சன் மற்றும் இந்நிகழ்வில் தமிழ் ஆங்கிலம் மலையாளம் தெலுங்கு ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகள் பேசும் ஆசிரியர்கள் பக்ஷிராஜன் உள்ளிட்ட சிறப்பு ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டு ஒவ்வொரு மொழியின் சிறப்புகள் குறித்து இந்நிகழ்வில் பேசினார்கள்.



▶ உலக மீனவர் தினத்தை முன்னிட்டு நிரவி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் கொடி ஏற்றி, காரைக்கால் ,திரு பட்டினம் பட்டினச்சேரியில் அமைந்துள்ள சிந்தனை சிற்பி சிங்காரவேலரின் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இந்நிகழ்வில் ஊர் பஞ்சாயத்தார்கள் பொதுமக்கள் ஊர் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# திருக்கடையூர் கோவிலில் வெளிநாடுகளை சார்ந்த சுற்றுலா பயணிகள் சுவாமி தரிசனம்



தரங்கம்பாடி, நவ- 21:

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான உலக புகழ் பெற்ற ஸ்ரீ அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. மார்க்கண்டேயனுக்காக சிவபெருமான் கால சம்ஹாரமூர்த்தியாக எழுந்தருளி எமனை காலால் எட்டி உதைத்து சம்ஹாரம் செய்தது உள்ளிட்ட பல்வேறுபுராண நிகழ்வுகளை உள்ளடக்கிய உலகப்புகழ்பெற்ற திருத்தலமாகவிளங்குகிறது.

அட்ட வீரட்ட தலங்களில்ஒன்றாகதிகழ்ந்து வரும் இவ்வாலயத்தில் வருடம் 365 நாட்களும் திருமணம் நடைபெறும் ஒரே தலமாகும். மேலும் பல்வேறு சிறப்புகளை உடைய இவ்வாலயத்திற்கு ஆந்திர மாநிலம் சித்தூரில் உள்ள ஆன்மீக போதனைகளை வழங்கும் நாடிஜோதிடர் கோபிநாத் தலைமையிலான ரஷ்யா, கஜகஸ்தான், உக்ரைன் உள்ளிட்ட நாடுகளை சார்ந்த 7 சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். கோவில் நிர்வாகம் சார்பில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து கோ பூஜை கஜ பூஜை செய்த அவர்கள் கோவிலுக்குள் சென்று விநாயகர், அமிர்தகடேஸ்வரர், காலசம்ஹாரமூர்த்தி, மற்றும் ஸ்ரீ அபிராமி சன்னிதிகளுக்கு சென்று பயபக்தியுடன் சுவாமி தரிசனம்செய்துவழிபட்டனர். ஹரி கிருஷ்ணன் குருக்கள் பூஜைகள் செய்தார். வெளிநாடுகளை சேர்ந்த ஏழு பேர்களிடம் கோயில் நிர்வாகத்தின் சார்பில் விருதகிரி கோயிலின் சிறப்பைபற்றிஎடுத்துரைத்து பிரசாதங்களை வழங்கினார்.

# ஆரணியில் வேலைக்கு சென்ற மகன் காணவில்லை தந்தை காவல் நிலையத்தில் புகார்

ஊத்துக்கோட்டை, நவ22-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி, சுப்பிரமணிய நகரை சேர்ந்தவர் சதீஷ்குமார் (வயது 26) ஆவார். இவர் விச்சூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், கடந்த 16-ம் தேதி வேலைக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு சதீஷ்குமார் சென்றார். ஆனால், மீண்டும் வீடு திரும்பவில்லை. இந்நிலையில், 16-ம் தேதி விச்சூரில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு சதீஷ்குமாரின் தந்தை குமார் சென்று வேலைக்கு வந்த தனது மகன் எங்கே? என்று கேட்டார். ஆனால், சதீஷ்குமார் ஆந்திர மாநிலத்தில் உள்ள தனது நிலத்தை பார்வையிட செல்வதாக கூறி பத்து நாட்கள் விடுப்பு எடுத்துள்ளார் என கூறினர்.

ஆனால், சதீஷ்குமாருக்கு ஆந்திர மாநிலத்தில் நிலம் ஏதும் இல்லை இதனால் தனது மகன் எங்கு? போனார். எதனால்? விடுப்பு எடுத்தார். என்பது புரியாமல் குமார் தவித்தார். எனவே, காணாமல் போன தனது மகனை கண்டுபிடித்து தருமாறு நேற்று முன் தினம் இரவு ஆரணி காவல் நிலையத்தில் குமார் புகார் செய்தார். எனவே, போலீசார் வழக்கு பதிவு செய்து காணாமல் போன சதீஷ்குமார் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# அமைச்சரிடம் வாழ்த்து பெற்ற குத்துச்சண்டை வீராங்கனை



வேலூர். நவ.22.

வேலூர் காட்பாடியில் உள்ள ஆக்சிலியம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வருபவர் ஜெருஷா ஜாஸ்மின். ராஜ்குமார் என்பவரின் மகளான இவர், குத்துச்சண்டை போட்டியில் பல்வேறு பரிசுகளை வென்றுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 28 மற்றும் 29ஆம் தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் பாரதியார் தினம் மற்றும் குடியரசு தினத்தையொட்டி தமிழக பள்ளிக்கல்வித் துறை சார்பாக நடைபெற்ற மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் 64-66 கிலோ பிரிவில் கலந்து கொண்டு மாநில அளவில் முதல் வீரராக தேர்வு செய்யப்பட்டார். அம்மாணவிக்கு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

இதற்காக அவர், வேலூருக்கு வந்திருந்த விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியிடம் பாராட்டுப் பெற்றார். இதைத் தொடர்ந்து தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வெல்ல வேண்டுமென்ற லட்சியக் கனவோடு பயிற்சிமேற்கொண்டிருந்த ஜெருஷா ஜாஸ்மின் 17.11.2023 அன்று ஈரோட்டில் நடைபெற்ற இந்திய பள்ளிகளுக்கான விளையாட்டு குழுமம் நடத்திய மாநில அளவிலான குத்து சண்டை 66 - 70 கிலோ பிரிவு போட்டியில் தங்கப்பதக்கம் வென்று இந்திய அளவில் நடைபெறும் தேசியப் போட்டிக்கு தகுதி பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து வேலூரில் தி.மு.கபொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகனை சந்தித்து ஜெருஷா ஜாஸ்மின் ஆசி பெற்றார்.

### பெரியபாளையத்தில் ஆமை வேகத்தில் நடைபெறும்

# ரூ.80 லட்சம் செலவிலான சிறு பாலம் கட்டும் பணியை விரைந்து முடிக்க பொதுமக்கள் கோரிக்கை



ஊத்துக்கோட்டை, நவ22-

திருவள்ளூர்மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் வாகன போக்குவரத்து நாளுக்கு,நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் போக்குவரத்து நெரிசல் என்பது அன்றாட நிகழ்வாக உள்ளது.

குறிப்பாக சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் போக்குவரத்து நெரிசல் என்பது தவிர்க்க முடியாத ஒருசெயலாகமாறிவிட்டது. இந்நிலையில், சாலையை அகலப்படுத்த நெடுஞ்சாலை துறை பல்வேறு கட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதில், ஒரு பகுதியாக பெரியபாளையம்-சென்னை நெடுஞ்சாலையில் பெரியபாளையம் கிரகப்பிரவேசம் நகர் அருகே சிறு பாலம் ஒன்று ரூ.80 லட்சம் செலவில் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

இப்பணி 80 சதவிகிதம் முடிந்து உள்ளது. ஆனால், மீதி உள்ள பணிகள் நடைபெறவில்லை. இதனால் இப்பகுதியில் அடிக்கடி வாகன விபத்துகளும், போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்ட வண்ணம்உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இப்பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் ஒருவர் பலியானார்.

மற்றொருவர் படுகாயம் அடைந்தார். இவ்வாறு இப்பகுதியில் வாகன விபத்து என்பது அன்றாட நிகழ்வாக உள்ளது. எனவே, இப்பணியை விரைவாக செய்து முடிக்க வேண்டும் என வாகன ஓட்டிகளும், பொதுமக்களும்கோரிக்கை விடுத்துள்ளனர். இப்பணி நடைபெறாததால் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியை கடக்க வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாக வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் இப்பாலபணியை முடித்து போக்குவரத்து நெரிசலை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

# திருவாத்தூர் ஊராட்சியில் மின் ஒயர் அறுந்து விழுந்ததில் ஐந்து மாடுகள் பலி



செய்யூர்,நவ. 22-

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட திருவாத்தூர் ஊராட்சியில் மின் ஊழியர்களின் அலட்சிய போக்கால் மேய்ச்சலுக்கு சென்ற ஐந்து மாடுகள் பலி.

இதனை கடுகப்பட்டு துணை மின் நிலையம் அதிகாரியிடம் திருவாத்தூர் ஊராட்சி பொதுமக்கள் புகார் அளித்தும் இது நாள் வரை எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லைஎன்று பொதுமக்கள் வேதனை அடைந்துள்ளனர்.

மேலும் உடனடி நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக நடந்து கொண்ட அரசு மின் ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# மாநில அளவில் நடைபெறும் அரசுப் பள்ளிகளுக்கிடையேயான கலைப் போட்டி. 15,930 மாணவ, மாணவிகள் பங்கேற்பு



வேலூர் நவ.22.

அரசுப்பள்ளிகளுக் கிடையேயான கலை போட்டி வேலூரில் துவங்கியது. கலைப் போட்டிகளில் அரசுப் பள்ளிமாணவ,மாணவிகள் ஏராளமானோர் ஆர்வமுடன் பங்கேற்றுள்ளனர் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடத்தப்படும் அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கான மாநில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ. குமாரவேல் பாண்டியன் தொடங்கி வைத்தார்.

வேலூர் ஓட்டேரி செவன்த் டே அட்வென்ச்சர் பள்ளியில் இதற்கான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர் பள்ளி மாணவ மாணவியரின் கலைப் போட்டிகளை கண்டு ரசித்தார். கலைப் போட்டிகளில் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள் ஏராளமானோர் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர். அவர்கள் வண்ண,வண்ண உடை அணிந்து கண்களை கவரும் விதமாக பல்வேறு கலைப்படைப்புகளை அரங்கேற்றி வருகின்றனர்.

வருகிற 24 ஆம் தேதி வரை வேலூர், செங்கல்பட்டு மற்றும் திருச்சியில் 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் இறுதி வெற்றி பெறும் மாணவன், மற்றும் மாணவிக்கு கலையரசன் மற்றும் கலையரசி விருது வழங்கப்பட உள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் பல்வேறு அரசுப் பள்ளிகளை சேர்ந்த சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலைப் போட்டிகளில் பங்கேற்றுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு,துணை மேயர் சுனில் குமார். ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில ஆலோசகர் சுந்தரராமன், வருவாய்கோட்டாட்சியர் கவிதா, முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உத்திரமேரூர் ஒன்றியம், சார்பில் திமுக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்



காஞ்சிபுரம்,நவ.22-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ தலைமை தாங்கினார்.

பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல் முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் ஞானசேகரன் அனைவரையும் வரவேற்றார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் எம்பி ஜி. செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து 200 பேருக்கு தையல் இந்திரம் இஸ்திரி பெட்டி மிதிவண்டி விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஏழை எளியவர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், ஒன்றிய செயலாளர் டி. குமார், உத்திரமேரூர் பேரூராட்சி தலைவர்- பொதுக்குழு உறுப்பினர் சசிகுமார், ஒன்றிய குழு பெருந்தலைவர் ஹேமலதா ஞானசேகரன், ஒன்றிய குழு துணை தலைவர் வசந்தி குமார், பேரூராட்சி துணை தலைவர் இளமதி கோவிந்தராஜன், உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் டீக்கடையில் போதை பொருள் விற்பனை செய்த கடை உரிமையாளரை போலீசார் கைது



சென்னை, நவ.22-

சென்னை புது வண்ணாரப்பேட்டையில் டீக்கடையில் போதை பொருள் விற்பனை செய்த கடை உரிமையாளரை போலீசார்கைதுசெய்தனர். புது வண்ணாரப்பேட்டை அருணாச்சலேஸ்வரர் கோயில் பகுதியில் உள்ள கடைகளில் புது வண்ணாரப்பேட்டை ஆய்வாளர்திடீர்சோதனை மேற்கொண்டார்.

அப்போது கிராஸ் ரோடு பெரியார் பூங்கா அருகே உள்ள மணி டீக்கடையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ், கூல்லிப், மாவா போன்ற போதை பொருட்கள் விற்பனை செய்தது தெரிய வந்தது இதனை தொடர்ந்து புகையிலைப் பொருட்களை பறிமுதல் செய்து கடையின் உரிமையாளர் சுப்பிரமணி என்பவரை போலீசார் கைது செய்தனர்.

இதனையடுத்து சுப்பிரமணியன் வங்கிக் கணக்கில் இருந்த 5 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் பணத்தை போலீசார் முடக்கினர் உணவு பாதுகாப்பு துறை முலம் கடைக்கு சீல் வைக்க போலீசார் பரிந்துரை செய்து மாநகராட்சி மூலம் கடையின் லைசென்ஸ் ரத்து செய்யப்பட்டது. பெட்டிக் கடையில் ஆரம்பித்த போதைப் பொருட்கள் தற்போது டீக்கடை வரை விற்பனை செய்யப்படுவது புது வண்ணாரப்பேட்டையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சீர்காழியில் தமிழ்நாடு அனைத்து உடற்கல்வி ஆசிரியர்கள் இயக்குனர் சங்கம் சார்பில் செயற்குழு கூட்டம்



சீர்காழி , நவ.22-

சீர்காழி பெஸ்ட் மெட்ரிக்குலேஷன் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அனைத்து உடற்கல்வி ஆசிரியர்கள், உடற்கல்வி இயக்குனர்கள் சங்கத்தின் சார்பில் முதலாவது மாநிலசெயற்குழுகூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சீர்காழி சபாநாயக முதலியார் இந்து மேனிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குனர் முரளிதரன் வரவேற்றார். சங்கத்தின் மாநில பொதுச்செயலாளரும், திட்டச்சேரி அரசு மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் கண்ணன் தலைமை வகித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக சீர்காழி பெஸ்ட் கல்வி குழுமத்தின் நிர்வாகி எஸ்.எஸ்.என்.ராஜ் கமல் கலந்துகொண்டார்.

கட்டத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் ஆண்டு தோறும் நடைபெறக்கூடிய ஆண்டுதேர்வில் தனியாக மாணவர்களுக்கு உடற்கல்விக்கென தேர்வு தனியாக வைக்கப்பட வேண்டும் எனவும் தமிழகம் முழுவதும் உள்ள தொகுப்புகுதி அடிப்படையில் பணியாற்றக்கூடிய உடற்கல்வி ஆசிரியர்கள் நிரந்தர பணி அளிக்க வேண்டும்எனவும்,ஆண்டு தோறும் 200 உடற்கல்வி துறை ஆசிரியர்களை புதிதாக பணி நியமனம் தமிழக அரசால் செய்யப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கையினை நிறைவேற்றப்பட்டு, அதனை தமிழக அரசின் பார்வைக்கு அனுப்பப்பட உள்ளதாக சங்கத்தின் சார்பில் தீர்மானம் செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் சம்பந்தம் மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குனர் செல்வ கணேசன், மயிலாடுதுறை தேசிய மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி இயக்குனர் ரவிச்சந்திரன், பொறையார் தவுசமுத்து நாடார்மேல்நிலைப்பள்ளி உடற்கல்வி ஆசிரியர் செந்தில் குமார், ராணிப்பேட்டை மாவட்ட பொறுப்பாளர் பாலகிருஷ்ணன்,சென்னை சரக பொருப்பாளர் ஆல்பர்ட் , சங்கத்தின் மாநில பொருளாளர் இளங்கோவன் திருவண்ணாமலை ஓய்வு பெற்ற உடற்கல்வி ஆய்வாளர் முனியன், சென்னை சரக உடற்கல்வி இயக்குனரான ஓய்வு பெற்றஇராமன்,வேலூரை சார்ந்த கலையரசன் உட்பட 50க்கும் மேற்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விழாவின் இறுதியாக மயிலாடுதுறை உடற்கல்வி ஆசிரியர் பன்னீர்செல்வம் நன்றி உரையாற்றினார். செயற்குழு கூட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளையும் திருவெண்காடு சு.சு.தி ஆண்கள்பள்ளிஉடற்கல்வி ஆசிரியர் செல்லதுரை செய்திருந்தார்.

# கடைகளில் கஞ்சா புகையிலை போதை வஸ்துகள் விற்பனை செய்தால் வங்கி கணக்கு முடக்கப்படுவதுடன் கடைக்கு சீல் வைக்கப்படும் வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் சக்திவேல் எச்சரிக்கை

சென்னை,நவ,22

சென்னை புது வண்ணாரப்பேட்டையில் காவல்துறை சார்பில் வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. புது வண்ணாரப்பேட்டை காவல் துணை ஆணையர் அலுவலகம் அருகே உள்ள காவலர்சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வண்ணாரப்பேட்டை துணை ஆணையர் சக்திவேல்மற்றும் உதவி ஆணையாளர்கள் ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் டீக்கடை பெட்டிக்கடை மற்றும் சிறு வியாபாரிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர், நிகழ்ச்சியில் முடிவில் போதை கஞ்சா புகையிலை பொருட்களை விற்பனை செய்ய மாட்டோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதனை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய வண்ணாரப்பேட்டை காவல் துணை ஆணையர் சக்திவேல் சென்னை வண்ணாரப்பேட்டை காவல் மாவட்டத்தை பொறுத்தவரை கஞ்சா மாவா குட்கா மற்றும் எந்தவிதமான புகையிலைப் பொருட்கள் போதை வஸ்துகள் விற்பனை செய்யப்படக்கூடாது.

என்பது அடிப்படையில் முழுமையாக முழு வீச்சில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார் கடந்த 40 நாட்களில் மட்டும் 42 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 51 குற்றவாளிகள் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும், மேலும் கஞ்சா குட்கா விற்பனை செய்பவர்களிடம் வங்கி கணக்குகள் பரிவர்த்தனை பெற்று 16 பேருடைய வங்கி கணக்குகள் 25 லட்ச ரூபாய் வரை விற்பனை மூலமாக சம்பாதித்த பணத்தை முடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேபோன்ற நடவடிக்கை தொடரும் என்றும் எந்த ஒரு இடத்திலும் போதை வஸ்துகள் விற்பனை செய்யப்படக் கூடாது அப்படி விற்பனை செய்தால் பொதுமக்கள் விற்பனை சம்பந்தமாக தகவல்களை காவல் துறைக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

வண்ணாரப்பேட்டை காவல் காவல் மாவட்டத்தில் 150 க்கும் அதிகமான டீக்கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன ஆகையால் டீக்கடை முதற்கொண்டு அனைத்து சிறு வியாபாரிகளையும் வரவழைத்து நேற்று விழிப்புணர் ஆய்வு கூட்டமாக நடைபெற்றதாக தெரிவித்தார்.

ஆய்வு கூட்டத்தில் கஞ்சா மற்றும் புகையிலை பாதிப்பு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது இதனால் எந்த அளவுக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதை தெரியப்படுத்திருக்கிறோம் என்று கூறினார். வழக்கு பதிவு மட்டுமல்லாமல் அது சம்பந்தப்பட்ட வங்கி கணக்கு பெட்டிக்கடை மற்றும் அனுமதி பெற்ற கடையில் விற்பனை செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட துறையினருக்கு தகவல் தெரிவித்து மாநகராட்சி மூலமாக அல்லது உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மூலம் கடைக்கு சீல் வைப்பதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும்

அனைத்து துறையிலும் முயற்சி மேற்கொள்வதினால் கண்டிப்பாக இனிமேல் வட சென்னை மாவட்டத்தில் குறிப்பாக வண்ணாரப்பேட்டை மாவட்டத்தில் எவ்வித போதைப்பொருளும் விற்பனை இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்வதாக உறுதியளித்தார்

## புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் பள்ளியில்
# சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளி ஆசிரியர்களுக்கு எளிய முறையில் தமிழ் கற்பித்தல் பயிற்சி




புதுக்கோட்டை, நவ.22–

தமிழ் நாடு அரசு பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் தனியார் சிபிஎஸ்இ மற்றும் ஐசிஎஸ்இ பள்ளி ஆசிரியர்களுக்கான எளிய முறையில் தமிழ் கற்பித்தல் பயிற்சியானது மௌண்ட் சீயோன் மெட்ரிக் பள்ளி கூட்ட அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் தொடக்கமாக மௌண்ட் சீயோன் சர்வதேசப் பள்ளி முதல்வர் ஜலஜாகுமாரி அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார், முதன்மைக் கல்வி அலுவலர் மஞ்சுளா முன்னிலை வகித்து ஆசிரியர்கள் வகுப்பறைக்குள் நுழையும்போது மலர்ந்த முகத்துடன் நுழைதல் வேண்டும், ஆசிரியரைப் பிடித்தால் மாணவர்களுக்கு அவர்கள் நடத்தும் பாடம் பிடிக்கும் என்றும் எளிய முறைகளை கூறி நினைவில் பதியவைப்பதில் கவனம் செலுத்தவேண்டும் என்று உரையாற்றினார், மாவட்ட கல்வி அலுவலர் தனியார் பள்ளிகள் அறவாழி சிறப்பு விருந்தினர்களை வரவேற்று கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் ஆலங்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பொறுப்பு முதல்வர் சி.சேதுராமன் பேசுகையில் திருக்குறளின் பெருமைகள், சரஸ்வதி மஹால் உருவான வரலாறு ஜி.யு.போப் தமிழுக்காற்றிய தொண்டுகள் ஆகியவற்றை சுவாராஸ்யமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். அதனைத் தொடர்ந்து திருமயம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் செந்தாமரைக்கண்ணன் கதைவழி கற்பித்தல், பாடல்பாடி கற்பித்தல், கற்றதை நினைவுகூற வைத்தல் நாபிறழ் பயிற்சிக்கு முக்கியதுவம் கொடுத்தல் ஆகிய பல எளிய வழிமுறைகளைக் கூறினார்.

மௌண்ட் சீயோன் சர்வதேசப்பள்ளி தமிழாசிரியை ஞானசெல்வி மாணவர்கள் குறில் நெடில் வேறுபாடுகள் அறிந்துகொள்ளல் எழுத்துப்பிழையின்றி எழுதும்முறை ஆகியவற்றை செயல்பாடுகள் வழி விளக்கி கூறினார், மௌண்ட் சீயோன் சர்வதேசப்பள்ளி தமிழாசிரியை உமாமுத்து நன்றியுரை வழங்கினார், இறுதியில் நாட்டுப்பண்ணுடன் பயிற்சிக் கூட்டமானது இனிதே நிறைவுற்றது. விழா நிகழ்வுகளை மௌண்ட் சீயோன் சர்வதேசப்பள்ளி தமிழாசிரியர்கள் க.கண்ணன் மற்றும் லெ.சின்னச்சாமி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.



▶ தென்காசி மாவட்டம் சிவகிரியில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற விழிப்புணர்வு இருசக்கர பேரணி பிரச்சாரப் பயணம் தென்காசி மாவட்ட எல்லையான சிவகிரி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அருகே பிரச்சாரத் தொண்டர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ராஜா எம்எல்ஏ, யு.எஸ்.டி.சீனிவாசன், வாசு ஒன்றியசெயலாளர் முத்தையா பாண்டியன், மாவட்ட கழக துணை செயலாளர் மனோகரன், கோமதி சங்கரி, திமுக மாநில மருத்துவர் அணி சார்பில் தென்காசி வடக்கு மாவட்ட மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் சு.சே. செண்பக விநாயகம் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது, இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு நிர்வாகிகள், வார்டு, பேரூர் கழகம், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், பூ கமிட்டி, பாக முகவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# கந்தர்வகோட்டை வட்டாரத்தில் சம்பா நெல்பயிரில் பூச்சி தாக்குதல் குறித்து வேளாண்துறை அதிகாரிகள் வயலாய்வு

கந்தர்வகோட்டை, நவ.22–

கந்தர்வகோட்டை வட்டாரத்தில் நடப்பு ஆண்டு சம்பா பருவத்தில் சுமார் 3000 எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது, தற்போது நிழவி வரும் தட்பவெப்பநிலை காரணமாக நெல்பயிரில் இலைசுருட்டு

புழு மற்றும் குருத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். அன்பரசன் தலைமையில் வேளாண் துறை களப்பணியாளர்கள் நேற்று துவார், அக்கச்சிப்பட்டி ஆகிய பகுதிகளில் வயலாய்வு மேற்கொண்டார்கள்.

இது குறித்து அவர் வெளியுட்டுள்ள செய்தி குறிப்பில் தற்போது வட்டாரத்தில் நிலவும் குறைந்த வெப்பநிலை மற்றும் அதிக காற்றின் ஈரப்பதம் போன்ற சூழ்நிலை நெற்பயிரை பூச்சி மற்றும் நோய் தாக்குவதற்கு உகந்ததாகும், ஆகவே விவசாயிகள் தங்கள் வயலில் குருத்துப்பூச்சி அல்லது இலைசுருட்டுப்புழு தாக்குதல் காணப்பட்டால் கீழ்கண்ட ஒருங்கிணைந்த முறைகளை பின்பற்றி பயிர்பாதுகாப்பு செய்திட கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மருந்துகளை தெளிக்கும்போது ஒட்டும் திரவத்தை ஒருலிட்டருக்கு ஒரு மிலி என்ற அளவில் கலந்து தெளிப்பதால் பூச்சிகொல்லி மருந்துகள் வீணாகாமல் பூச்சிகளை கட்டுபடுத்தலாம். மேலும் விவசாயிகள் தங்கள் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடன் உழவன்செயலி மூலம் படம்பிடித்து அனுப்பினால் 24 மணி நேரத்திற்குள் தங்களுடைய அலைபேசிக்கு உரிய பரிந்துரை அனுப்பி வைக்கப்படும். எனவே விவிசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பயனடைய கேட்டுக்கொள்கிறார்கள்.

## ஓமன் நாட்டில் கடத்தப்பட்ட
# தமிழக மீனவரை மீட்கக் கோரி மத்திய அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, நவ. 22–

ஓமன் நாட்டில் கடத்திச் செல்லப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த பெத்தாலி என்பவரை மீட்டு தாயகம் கொண்டுவர உரிய தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

ஓமன் நாட்டில் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த மீனவர் பெத்தாலி என்பவரை மீட்டுக் கொண்டுவரவும், ஓமனில் மீன்பிடிப் படகுகளில் பணிபுரிந்து வந்த மீனவக் குழுவினரின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கவும் உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், ஓமன் நாட்டின் துக்ம் துறைமுகத்தில் உள்ள NOOH 1012 மற்றும் YAYA 1184, அல்ரெடா (ஓமானியன்) ஆகிய மீன்பிடிப் படகுகளில் வேலை செய்து வந்த தமிழகத்தைச் சேர்ந்த 18 பேர் கொண்ட குழுவில், பெத்தாலிஸ் என்பவரும் பணிபுரிந்து வந்தார். அந்த மீன்பிடிப் படகுகளில் பணிபுரிந்து வந்த 18 மீனவர்களின் சம்பளத்தை உரிமையாளர் தராததால் உரிமையாளருக்கும், மீனவர்களுக்கும் இடையே பிரச்சனை நிலவி வந்தது. இந்த நிலையில், பெத்தாலிஸ்ஸை அடையாளம் தெரியாத சிலர் கடத்திச் சென்றுள்ளனர். அவரை உடனடியாகக் கண்டுபிடித்து, இந்தியாவுக்கு திருப்பி கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெத்தாலிஸ் மனைவி ஷோபாராணி கோரிக்கை விடுத்துள்ளதை, கடிதத்தில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், ஓமன் நாட்டிலுள்ள, இந்தியத்தூதரகம் மூலம் பெத்தாலியை மீட்டு தாயகம் கொண்டுவர உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# வைரமுத்துவை மகளிர் ஆணையம் விசாரிக்க வேண்டும் ஹெச்.ராஜா திடீர் வலியுறுத்தல்



கோவை, நவ. 22–

பெண்கள் இல்லையென்றால் ஆண்களுக்கு ஆறுதலே கிடைத்திருக்காது என கவிஞர் வைரமுத்து பேசிய நிலையில், முதலில் சின்மயி குற்றச்சாட்டின் மீது இவரை மகளிர் ஆணையம் விசாரிக்க வேண்டுமென பாஜக மூத்த தலைவர் ஹெச். ராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கவிஞர் வைரமுத்து, ''பேசியே வளர்ந்த திராவிட இயக்கங்களில் இன்றைக்கு பேசவே ஆள் இல்லாத நிலை உள்ளது. பெரியாரையும், அம்பேத்கரையும் நவீன யுகத்திற்கு மாற்ற வேண்டும். நல்ல சிந்தனைகள் மக்களிடம் கொண்டு சேர்ப்பவர்களில் எண்ணிக்கை குறைந்துள்ளது.

பெண்கள் இல்லையென்றால் ஆண்களுக்கு ஆறுதலே கிடைத்திருக்காது. ஆனால், பெண்களே இல்லையென்றால் ஆண்களுக்கு ஆறுதலே தேவை இருக்காது" என பேசினார்.

அவர் பேசிய வீடியோ இணையத்தில் வைரலான நிலையில், ''முதலில் சின்மயி அவர்களின் குற்றச்சாட்டின் அடிப்படையில் மகளிர் ஆணையம் இவருக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும்'' என பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். வைரமுத்து திராவிட போராளி என்ற போர்வையில் ஒளிந்துக் கொண்டிருக்கிறார் என பாடகி சின்மயி பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரியலூர் பகுதியில் புழு தாக்குதலுக்கு ஆளான மக்காசோள பயிருக்கு இழப்பீடு வழங்க வேண்டும்
## மாவட்ட ஆட்சியரிடம் உழவர் பேரியக்கம் கோரிக்கை



அரியலூர், நவ.22–

அரியலூர் பகுதியில், ராணுவ படைப்புழு தாக்குதலுக்கு ஆளான மக்காசோள பயிருக்கு, இழப்பீடு வழங்க வேண்டும் என, மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது:

இது பற்றி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பு அமைப்பான உழவர் பேரியக்கம் சார்பில், கட்சியின் அரியலூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பெரியசாமி உள்ளிட்டோர், அரியலூர் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த கோரிக்கை மனு, அரியலூர் மாவட்டம், அரியலூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட கொல்லாபுரம், அமீனாபுரம், தாமரைக் குளம், ஓட்ட கோவில், கோவிந்தபுரம், மகாலிங்கபுரம், அகரம், நல்லாம்பத்தை, எருத்துக் காரன்பட்டி, சாளையக்குறிச்சி, கல்லமேடு, ஆதிகுடிக்காடு, சுப்பராயபுரம், வெள்ளூர், பொய்யாத நல்லூர், உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள், சுமார் 1,500 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர்.

பயிர் சாகுபடி செய்ய ஏக்கர் ஒன்றுக்கு, 30 ஆயிரம் ரூபாய் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை செலவாகியுள்ளது. இரண்டு முறை பூச்சி மருந்து தெளிக்கப்பட்டுள்ளது, ஆனாலும் புழு பூச்சிகள் சாகவில்லை. பயிர் காப்பீடும் செய்யப்பட்டுள்ளது, விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் பயிர் கடன் பெற்றும், விவசாய பயிர் செய்துள்ளனர், எனினும் மக்காச்சோள பயிரில் ராணுவ படைப்புழு தாக்குதல் அதிகமாக உள்ளது, எனவே பாதிக்கப்பட்ட பயிர்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் பார்வையிட்டு, ஏக்கர் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



▶ தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மாணவ, மாணவிகளின் மருத்துவ கனவை சிதைக்கும் நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து இயக்கம் நடைபெற்றது, இதில் சிறுபான்மை உரிமை நல அணி மாநிலச் செயலாளர் மருத்துவர் சுபேர்கான் அறிவுறுத்தலின்படி திமுக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த மாதம் சென்னையில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து புளியங்குடியில் மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் நாகூர் கனி மாவட்ட தலைவர் மரிய லூயிஸ் பாண்டியன் ஆகியோர் தலைமையில் ஆயிரம் பேர்களிடம் நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து வாங்கிய அட்டைகளை தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏவிடம் ஒப்படைத்தனர் சிறப்பாக பணியாற்றிய அணி நிர்வாகிகளை வெகுவாக பாராட்டினார்.

# முதல் பெண் ஆதீனம் திலகவதியார் திருவருள் ஆதீனம் சாயிமாதா சிவ பிருந்தாதேவியின் 25–ஆம் ஆண்டு குருபூசை விழா அன்னதான விழா



புதுக்கோட்டை

முதல் பெண் ஆதீனமாக திகழ்ந்த திலகவதியார் திருவருள் ஆதீனம் சாயிமாதா சிவ பிருந்தாதேவியின் 25–ஆம் ஆண்டு குருபூசை விழா ஜீவா நகரிலுள்ள அவரது நினைவிடத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்விற்கு தலைமையேற்று குருவழிபாட்டையும் ஆராதனையையும் ஆதீனகர்த்தர் தவத்திரு தயானந்த சந்திரசேகர சுவாமிகள் செய்தார். முன்னதாக கே.என். ஆகாஷ் திருமுறை பாடல்களை பாடினார். நிகழ்வுக்கு, டாக்டர். எஸ். இராமதாஸ், இராமையா, பேரா. பொ.அண்ணாமலை, இராமுக்கண்ணு, பேரா. எஸ். விசுவநாதன், டாக்டர். சி.கோவிந்தராசன், கவிஞர் நிலவை பழனியப்பன், ஜி.எஸ்.தனபதி, ந. புண்ணியமூர்த்தி, கே.செல்வராஜ், வழக்கறிஞர் இராஜா, தா.முரளிதரன், அ.செல்வராஜ், பொறி.ச.கண்ணன், நாடிமுத்து, சோலை பாப்பா பாலசுப்பிரமணியன், அபிராமிநாதன், நல்லமுத்து இராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிறைவாக, அன்னதானம் வழங்கப்பட்டது.

# விஷம் குடித்து சாவோமே தவிர அதைச் செய்ய மாட்டோம் – ஓபிஎஸ் அணி ஆவேசம்



மதுரை, நவ. 22–

"கால் கிலோ விஷத்தை வாங்கிக் குடித்துச் செத்தாலும் சாவோம் தவிர, எடப்பாடி பழனிசாமி பக்கம் செல்ல மாட்டோம்" என ஓபிஎஸ் ஆதரவாளர் மருது அழகுராஜ் கூறியுள்ளார்.

அதிமுகவில் ஒற்றைத் தலைமை விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததைத் தொடர்ந்து கட்சியில் இருந்து ஓபிஎஸ் வெளியேற்றப்பட்டார். இதனை எதிர்த்து நீதிமன்றங்கள் மற்றும் தேர்தல் ஆணையத்தின் கதவுகளை ஓபிஎஸ் தொடர்ந்து தட்டினார். ஆனாலும், அதிமுகவின் பொதுச்செயலாளராக தேர்தல் ஆணையம் எடப்பாடி பழனிசாமியை அங்கீகரித்தது. உயர் நீதிமன்றமும், எடப்பாடி பழனிசாமியை பொதுச் செயலாளராக அங்கீகரித்து அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்தது.

அதுமட்டுமில்லாமல் மற்றொரு வழக்கில் அதிமுகவின் பெயர், கொடி உள்ளிட்டவற்றை ஓபிஎஸ், அவரது தரப்பினர் பயன்படுத்த கூடாது என இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து ஓபிஎஸ் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே நீதிமன்றம் இடைக்கால தடை விதித்ததால், ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்கள் காரில் அதிமுக கொடி இன்றி பயணித்து வருகின்றனர். ஓபிஎஸ் வழக்கமாக அறிக்கை வெளியிடும் அதிமுக லெட்டர் ஹெட்டையும் பயன்படுத்துவது இல்லை. கட்சி கரை வேட்டிக்கு பதிலாக காவி வேட்டியை அணிந்து வருகிறார் ஓபிஎஸ். உயர் நீதிமன்ற தீர்ப்பை பொறுத்தே ஓபிஎஸ்ஸின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்பது தெரியவரும்.

இந்நிலையில் ஓ.பன்னீர் செல்வத்தின் ஆதரவாளர் மருது செல்வராஜ் மதுரையில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை மாலை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போது பேசிய அவர், "எடப்பாடி பழனிசாமி சூடு சுரணை என்றெல்லாம் பேசுவதற்கு அருகதையற்ற தலைவர். அவர் முதலமைச்சராக நான்கரை வருடங்கள் இருந்ததற்கு ஆதரவளித்தவர் ஓபிஎஸ்.

ஒருநாள் தனக்கு உதவி செய்தவரைக் கூட சொல் அளந்து பேச வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால், ஆட்சி முடிகிற வரை அண்ணன் அண்ணன் என்று கூழைக் கும்பிடு போட்டுவிட்டு, முதல்வர் வேட்பாளராக அறிவித்தபோது ஓபிஎஸ் காலில் விழுந்து வணங்கிவிட்டு, இன்று திமுகவின் பி டீம் என்று சொல்கிறார்.

ஜெயலலிதாவின் உயிர் நாடி என்பது திமுக எதிர்ப்புத்தான். மூச்சை விடும் வரை திமுக எதிர்ப்பில் சமரசம் செய்து கொள்ளாதவர் ஜெயலலிதா. அவரே தனக்கு சோதனை வந்தபோது, தனது தலைப்பாகையை நம்பி இறக்கி வைத்த இடம் ஓபிஎஸ்ஸின் மடி தான். திமுக எதிர்ப்பில் ஓபிஎஸ் உறுதியாக இருப்பார் என்பது ஜெயலலிதா கொடுத்த அங்கீகாரம். ஓபிஎஸ் பற்றி தரம் தாழ்ந்து பேசும் செயலை எடப்பாடி நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஈரோட்டில் போய் சூடு, சுரணை இருந்தால், மீசை வைத்த ஆம்பளையாக இருந்தால் என்றெல்லாம் பேசினார். சூடு சுரணை இருப்பவன் செய்யும் காரியமா கூவத்தூரில் காலில் விழுந்தது? மீசை வைத்தால் தான் ஆம்பளையா? ஆம்பளைக்கு மட்டும் தான் வீரமா? வேலு நாச்சியாருக்கு மீசை இல்லை, வீரம் இல்லையா? அதிமுகவை 5 முறை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திய ஜெயலலிதாவுக்கு மீசை இல்லை. அவர் வீரம் இல்லாதவரா?

மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு என்னோடு வந்து சேர்ந்து கொள்ளலாம் என்று எடப்பாடி பழனிசாமி சொன்னார். இதுவரை அவருக்கு எவ்வளவு மன்னிப்பு கடிதம் வந்திருக்கிறது என்பதை எடப்பாடி வெளியிடுவாரா? எங்கோ ஒருவர் விலை போகலாம். பயிருக்கு நடுவே களைகள் பிறக்கும். காசுக்கு போகிறவர்கள் போவார்கள். என்னைப் பொறுத்தவரை கால் கிலோ விஷத்தை வாங்கிக் குடித்துச் செத்தாலும் சாவோம் தவிர, எடப்பாடி பழனிசாமி பக்கம் செல்ல மாட்டோம்" என ஆவேசமாக கூறினார்.



▶ கரூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் தங்கவேல் 21 பேருக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# டேபிள் டென்னிஸில் கார்த்திகேயன் சாம்பியன்



**சென்னை : நவ. 22,**

**மாநில டேபிள் டென்னிஸ் போட்டியில் சென்னை ஐசிஎப் உள்விளையாட்டரங்கில் நடைபெற்று வந்தது.**

இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் எஸ்.கார்த்திகேயன் 7-11, 3-11, 12-10, 11-6, 13-11, 6-11, 11-3 என்ற செட் கணக்கில் எஸ்.பிரேயஷை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். மகளிர் பிரிவில் பி.காவ்யஸ்ரீ 11-8, 11-5, 13-11, 11-9 என்ற செட் கணக்கில் செலீனா தீப்தியை வீழ்த்தி பட்டம் வென்றார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான சிறுவர் பிரிவில் எஸ்.பிரேயஷ், சிறுமியர் பிரிவில் எம்.அனன்யா, 17 வயதுக்கு உட்பட்டோருக்கான சிறுவர் பிரிவில் அபினந்த், சிறுமியர் பிரிவில் ஸ்ரேயா ஆனந்த், 15 வயதுக்கு உட்பட்டோருக்கான சிறுவர் பிரிவில் சித்தார்த், சிறுமியர் பிரிவில்அனன்யா,13வயதுக்கு உட்பட்டோருக்கான சிறுவர் பிரிவில் ஆகாஷ் ராஜவேலு, சிறுமியர் பிரிவில் வார்னிகா, 11 வயதுக்கு உட்பட்டோருக்கான சிறுவர் பிரிவில் அஸ்வஜித், சிறுமியர் பிரிவில் பவித்ரா ஆகியோரும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

வெற்றிபெற்றவர்களுக்கு துரோணாச்சாரியார் மற்றும் அர்ஜுனாவிருதுவென்றஎஸ். ராமன், முன்னாள் சர்வதேச வீராங்கனை ஏ.வி.நிவேதிதா, முன்னாள் மாநில வீரர் ரவி வெங்கடேஷ் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

# 1.25 மில்லியன் ரசிகர்கள் – உலக சாதனையாக மாறிய

## உலகக் கோப்பை கிரிக்கெட் 2023 தொடர்



**அகமதாபாத் : நவ. 22,**

**ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 13-வது பதிப்பில் 1.25 மில்லியன் ரசிகர்கள் கலந்து கொண்டது உலக சாதனையாக மாறியுள்ளது.**

ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் 13-வது பதிப்பில் பட்டம் வென்று அசத்தியுள்ளது ஆஸ்திரேலியா. 10 அணிகள் கலந்துகொண்ட இந்த கிரிக்கெட் திருவிழா கடந்த அக்டோபர் 5-ம் தேதி தொடங்கியது. லீக் சுற்றுகளின் முடிவில் இந்தியா, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 4 அணிகள் அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இதில் இந்தியா 70 ரன்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியையும், ஆஸ்திரேலியா 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்காவையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

கோப்பை யாருக்கு என்பதை தீர்மானிக்கும் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டம் உலகின் மிகப்பெரிய மைதானமான 1.30 லட்சம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடந்தேறியது. இந்த ஆட்டத்தில் வென்று 6வது முறையாக கோப்பையை கைப்பற்றியது ஆஸ்திரேலியா.

இந்த ஆட்டம் உட்பட, இந்த உலகக் கோப்பை தொடர் முழுவதையும் 1.25 மில்லியன் ரசிகர்கள் நேரில் கண்டுகளித்தனர். 45 நாட்கள் நடந்த இந்த தொடரை கிட்டத்தட்ட 12,50,307 ரசிகர்கள் மைதானத்துக்கு வந்து பார்த்துள்ளனர். இது உலக சாதனையாக மாறியுள்ளது. கடந்த 2015ல் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடந்த உலகக்கோப்பை தொடரை 1,016 மில்லியன் மக்கள் பார்த்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை இந்தியாவில் நடந்த உலகக் கோப்பை தொடர் முறியடித்துள்ளது. விளையாட்டு வரலாற்றில் மிகப்பெரிய ஐசிசி நிகழ்வுகளில் ஒன்றாக இது மாறியுள்ளது.

இந்த தொடரின் ஆரம்பத்தில் பார்வையாளர்கள் குறைவாகவே வந்தனர். எனினும், இந்திய அணியின் ஆட்டங்களுக்கு பிறகு அதிகமான ரசிகர்கள் வருகைப் புரிந்ததால் இந்த அளவுக்கு எண்ணிக்கை கூடியுள்ளது. இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான இறுதிப் போட்டியில் மட்டும் சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "கோலியை நான் ஆட்டமிழக்கச் செய்தபோது மைதானத்தில் நிலவிய அமைதி சிறப்பான தருணம்" – கம்மின்ஸ்



**அகமதாபாத் : நவ. 22,**

**ஐசிசி உலகக் கோப்பை கிரிக்கெட்போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது. இந்த வெற்றி குறித்து பாட் கம்மின்ஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:**

இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இது நீண்ட நாட்களுக்கு நினைவில் நிற்கும். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் கூடியிருந்த நரேந்திர மோடி ஸ்டேடியத்தில், விராட் கோலியை ஆட்டமிழக்கச் செய்தபோது மைதானத்தில் அமைதிநிலவியது. அதுநான் மைதானத்தில் அனுபவித்த இனிமையான தருணமாகும். அப்போது மைதானத்தில் நிலவிய அமைதி எனக்கு மிகவும் திருப்திகரமாக இருந்தது. நான் அப்படித்தான் நினைக்கிறேன்.

விராட் கோலி மிகச் சிறந்த வீரர். அவர் பெரும்பாலான ஆட்டங்களில் சதங்களை விளாசிவிடுவார். அவரை விரைவில் ஆட்டமிழக்கச் செய்ததில் எனக்கு மகிழ்ச்சி. அப்போது மைதானத்தில் ஏற்பட்ட மயான அமைதியை உணர்ந்தேன். அது எனக்குத் திருப்தி அளித்தது.

நான் தங்கியிருந்த ஓட்டலில் ஏராளமான இந்திய ரசிகர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் நீல நிற உடையணிந்து மைதானத்தை நோக்கிநடந்து சென்றனர். அப்போது எனக்கு சிறிது பதட்டமாக இருந்தது. நான் எப்போதும் மிகவும் நிதானமாக இருக்கிறேன் என்று நினைப்பவன். ஆனால் காலை சிறிது பதட்டத்துடன்தான் இருந்தேன். ஆனால் மாலையில் நாங்கள் வெற்றியைப் பெற்றுவிட்டோம் என்று அவர் கூறினார்.

# இந்திய அணியின் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியவில்லை ரசிகர்கள் 2 பேர் தற்கொலை



**அகமதாபாத் : நவ. 22,**

**உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் இந்திய கிரிக்கெட் அணி தோல்வியடைந்தது கோடிக்கணக்கான நாட்டு மக்களின் இதயங்களை உடைத்தது. இதனால் பலரும் கண்ணீர்விட்டு அழுதனர். இந்த நிலையில் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியாத 2 ரசிகர்கள் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் லீக் ஆட்டம் மற்றும் அரையிறுதி போட்டியில் அட்டகாசமாக விளையாடி, இறுதிப் போட்டிக்குள் நுழைந்த இந்திய அணி, ஆஸ்திரேலியா அணியுடன் மோதியது. தோல்வியே தழுவாமல் இந்தியா விளையாடியதால் நிச்சயம் உலகக் கோப்பையை இந்தியா வெல்லும் என ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை சந்தித்தது.

இது இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில், மேற்கு வங்கம் பங்குரா மாவட்டத்தைச் சேர்ந்த இளம் மல்யுத்த வீரர் ராகுல் லோஹர் என்ற இளைஞர் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது. இந்தியா நிச்சயம் வெற்றிப்பெறும் என தனது நண்பர்களிடம் தெரிவித்துள்ளார். இந்தியா தோல்வியை தழுவியது அவரை நண்பர்கள் கிண்டலடித்து உள்ளனர். இதனால் மனமுடைந்த அவர், வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல ஒடிசா மாநிலம் ஜெய்ஜ்பூர் பகுதியை சேர்ந்தவர் தேவ் ராஜன் தாஸ் (23). இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை உலகக் கோப்பை இறுதிப்போட்டியை டிவியில் பார்த்துள்ளார். இறுதிப்போட்டியில் இந்தியா தோல்வியடைந்த நிலையில் மிகுந்த மன உளைச்சலில் இருந்ததேவ்ராஜன்தாஸ்இரவு வீட்டின் மொட்டை மாடியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். தற்கொலை செய்துகொண்ட தேவ் ராஜன் தாஸ் மனநல பிரச்சினை தொடர்பாக சிகிச்சை பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

வரலாறு சினிமா

# "மன்னிப்பு கேட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" மன்சூர் அலிகானுக்கு பாரதிராஜா வலியுறுத்தல்



**சென்னை : நவ. 22,**

**"மன்சூர் அலி கான் மன்னிப்பு கேட்டு இப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைப்பதே சிறந்த செயல்" என்று தமிழ்த் திரைப்பட நடப்பு தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் பாரதிராஜா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சினிமா துறையில் சக கலைஞர்களை மதிப்பது மிகவும் அவசியம். பெண்கள் சுயமாக வெளியுலகம் வரவும், சுய உழைப்பில் உயரவும் போராடும் காலம் இது. அப்படிப்பட்ட நேரத்தில் பெண்களைப் பற்றி யார் இழிவாக பேசினாலும் அது கண்டிக்கத் தக்கது. அதுவும் சினிமாவில் பெண்கள் என்றாலே ஒரு இளக்காரப் பார்வை பலரிடம் இருக்கிறது. ஆனால் பொதுவெளியை விட சினிமா இன்று பெண்களுக்கு நன்மதிப்பையும், உயர்ந்த நிலையையும், சமமாக அவர்களை மதிக்கும் நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இக்காலகட்டங்களில் நம்மைச் சுற்றிப் போராடி வெல்லும் பெண்களுக்கு உறுதுணையாக, தூணாக நின்று வாழ்த்த வேண்டியது நம் அனைவரின் கடமை. சில மேடைகள்...சில பேட்டிகள்... சில நேரங்கள், சில மனிதர்களின் சிந்தனையை... நாவைப் புரட்டிப்போடும். நாகவனமும்...மேடை நாரிகமும் அனைத்து இடங்களிலும் மிக முக்கியமானது. நடிகர் மன்சூர் அலிகான் தனது பேட்டியில் நிதானித்திருக்க வேண்டும். விடும் வார்த்தைகள் மற்றவர்களை வலிக்கச் செய்யுமே என்பதை உணர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் வரம்பு மீறி நாம் மதிக்கும் ஒரு சக நடிகை பற்றி பேசியிருக்கிறார்.

இன்றைய திரையுலகை வேறு தளத்திற்கு கொண்டு செல்லும் கடமை நம் அனைவருக்கும் உள்ளது. சகக் கலைஞர்களைப் பற்றி பேசும்போது பொறுப்புணர்ந்து பேச வேண்டும். அவ்வாறு பொறுப்புணராமல், தடித்த வார்த்தைகளைப் பேசியதற்கு, நமது சங்கம் சார்பில் என் வன்மையான கண்டனங்களைத்தெரிவித்துக் கொள்கிறேன். தவிர, பாதிக்கப்பட்டவர் அவர்பேசியது தவறு. எனது நன்நிலையை அவ்வார்த்தைகள் பாதிக்கிறது என்று பாதிக்கப்பட்ட பெண்ணாக அவர் குரல் எழுப்பியுள்ள நிலையில், தானாக முன்வந்து மன்சூர் அலிகான்மன்னிப்புகேட்காதது சரியற்ற, முறையற்ற செயல்.

மன்னிப்பு கேட்பது மீசை மண்ணில் ஒட்டும் செயல் அல்ல. அது தன்னை மெருகேற்றிக்கொள்ள... உணர்ந்துகொள்ள ... பெருந்தன்மையைக் கற்றுக் கொள்ள உதவும். சமயத்தில் அத்தன்மையே நம்மை பலமானவர்களாகவும் மாற்றும். மன்சூர் அலி கான் மன்னிப்பு கேட்டு இப்பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைப்பதே சிறந்த செயல் என்று நாங்கள் அனைவரும் கருதுகிறோம். கலைஞர்கள், மேடையில் பேசும்போது காமெடி என்ற பெயரிலோ, வலைதளங்களில் வைரலாகும் நோக்கோடோ அடுத்தவர்களைபுண்படுத்தும் வார்த்தைகளைத் தவிர்க்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கருணாநிதி நூற்றாண்டு விழாவுக்கு விஜய், அஜித் வருவார்கள்"

## தேனாண்டாள் முரளி நம்பிக்கை




**சென்னை : நவ. 22,**

**"கருணாநிதி நூற்றாண்டு விழாவுக்கு விஜய், அஜித் உள்ளிட்ட அனைவரையும் அழைக்கப் போகிறோம். அவர்கள் கலந்துகொள்வார்கள் என நம்புகிறோம். யாரையும் கட்டாயப்படுத்த போவதில்லை" என தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தலைவர் தேனாண்டாள் முரளி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

மறைந்ததிமுகதலைவரும், முன்னாள் முதல்வரும் கருணாநிதி நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் திமுக சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த சில மாதங்களுக்கு முன் நடைபெற்ற தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்க பொதுக்குழுக் கூட்டத்தில் 'கலைஞர் 100 விழா' பிரம்மாண்டமாக நடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது. திரையுலகின் மற்ற சங்கங்களுடன் இணைந்து தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைமையில், 'கலைஞர் 100' விழா வரும் டிசம்பர் 24-ம் தேதி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தயாரிப்பாளர் சங்க தலைவர் தேனாண்டாள் முரளி பேசுகையில், "அகில இந்திய அளவில் தெலுங்கு கன்னடம், பெங்காலி, மலையாளம், இந்தி மராத்தி, ஒரியா, குஜராத்தி, என பல மொழி திரைப்பட கலைஞர்களை இந்த விழாவில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுக்க உள்ளோம். கருணாநிதி வசனம் எழுதிய படங்களில் இருந்து பல்வேறு காட்சிகள் நேரடியாக நடித்து காட்ட திரைப்பட நட்சத்திரங்கள் தயாராகி வருகின்றனர். இந்த மாபெரும் விழாவில் முதல்கட்டமாக ரஜினி, கமல், இளையராஜா கலந்துகொள்ள இசைவு தெரிவித்துள்ளனர். இந்த விழாவில் தமிழ் சினிமாவில் உள்ள முன்னணி நட்சத்திரங்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள் என பலரும் கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளோம்.

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் குறைந்தபட்சம் 35,000 பேர் இந்த விழாவினை அமர்ந்துபார்க்கும் வண்ணம்மேடை அமைக்கப்பட உள்ளது. இந்த மாபெரும் விழாவில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடுவதற்கானவேலைகள் நடைபெற்று வருகிறது. நடனம், நாடகம், இசைக்கச்சேரி, ஒலி, ஒளி காட்சிகள், ட்ரோன்கள் படையெடுப்பில் கண்கவர் நிகழ்ச்சிகள் மேலும் பல வித்தியாசமான நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவரும் வண்ணம் உருவாக்கி வருகிறோம்.

இந்த விழாவினை திரை நட்சத்திரங்களும், திரைக்கலைஞர்களும் பங்கெடுத்து சிறப்பிக்க இருப்பதால் அடுத்த மாதம் டிசம்பர் 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு முழுவதும் படப்பிடிப்புகள் உட்படதிரைஉலகவேலைகள் எதுவும் நடைபெறாது. இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், உள்ளிட்ட மத்திய, மாநில அமைச்சர் கலந்துகொள்வர்" என தெரவித்தார்.

மேலும், "பெப்சியில் 25 ஆயிரம் பேர் உள்ளனர். திரையரங்க உரிமையாளர்கள் உள்ளிட்ட சினிமாவைச்சேர்ந்த அனைவரும் கலந்துகொள்ள சரியான இடமாக சேப்பாக்கம் மைதானம் இருக்கும் என்று நினைத்து தான் அதனை முடிவு செய்தோம். நேரு உள்விளையாட்டு அரங்கம் போதாது என்பதால் சேப்பாக்கத்தை முடிவு செய்தோம். விஜய், அஜித் உள்ளிட்ட அனைவரையும் அழைக்கபோகிறோம். அவர்கள் கலந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை. எங்களின் கடமை அவர்களை அழைப்பது தான். வருவது அவரவரின் விருப்பம். க்யூ ஆர் கோடு அமைக்கப்பட்ட பாஸ் இலவசமாக வழங்கப்படும். அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் முழுமையாக செய்யப்படும்." என்றார்.

# "சினிமா ஒரு அற்புதமான மொழி" கோவா திரைப்பட விழாவில் விஜய் சேதுபதி




**கோவா : நவ. 22,**

**"புதியதோர் உலகத்துக்கு அழைத்துச் சென்று, புது வகையான அனுபவத்தை கொடுக்கும் சினிமா ஒரு அற்புதமான ஊடகம்" என நடிகர் விஜய் சேதுபதி தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் 54வது சர்வதேச திரைப்பட விழா (IFFI) கோவாவில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை தொடங்கியது. இதன் தொடக்க விழா கோவா தலைநகர் பனாஜியில் உள்ள ஷ்யாம பிரசாத் முகர்ஜி உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இதில் நடிகர் விஜய் சேதுபதி நடித்துள்ள 'காந்தி டாக்ஸ்' என்ற மவுன மொழி படத்துக்கான ப்ரோமோ வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விஜய் சேதுபதியிடம், 'இந்த விழாவில் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?' என கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "சினிமா ஒரு அற்புதான மொழி. அது பார்வையாளர்களை வேறொரு உலகத்துக்குள் அழைத்துச் செல்கிறது. அதன் மூலம் அவர்கள் புதிய அனுபவத்தை பெறுகின்றனர்.

சினிமா புதிய கலாசாரத்தை அறிமுகப்படுத்துகிறது. எமோஷன்களை வெளிப்படுத்தி சக மனிதர்களை எப்படி நடத்த வேண்டும் என சொல்லிக்கொடுக்கிறது. ஆகவே தான் சினிமா ஒரு அற்புதமான ஊடகம். நானும் இதில் ஒரு பகுதியாக இருப்பதை நினைத்து மகிழ்கிறேன். குறிப்பாக ஒரு நடிகன் என்ற முறையில் ஒவ்வொரு தருணங்களையும் ரசிக்கிறேன். நான் இதை அனுபவிக்கிறேன். நான் எதையும் எதிர்பார்க்கவில்லை, மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்றார்.

விஜய் சேதுபதி, அதிதி ராவ் ஹைதாரி, அரவிந்த் சாமி மற்றும் சித்தார்த் ஜாதவ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இப்படம் பிளாக் காமெடியை அடிப்படையாகக் கொண்ட உருவாக்கப்பட்டது. மவுன மொழிபடமான இப்படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். இந்தத் திரைப்படம் கோவாவில் நடைபெற்று வரும் சர்வதேச திரைப்பட விழாவில் நேற்று திரையிடப்பட்டது. இதில் திரையிடப்பட்ட முதல் மவுன மொழித் திரைப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்சூர் தப்புன்னா : ரஜினி பேசுனதும் தப்பு தான் – பிஸ்மி காட்டம்





**சென்னை : நவ. 22,**

**த்ரிஷா விவகாரத்தில் மன்சூரை கட்டம் கட்டி கேள்வி கேட்பவர்கள் ஏன் ரஜினிகாந்த்தை அப்படி கேள்வி கேட்கவில்லை என பத்திரிகையாளர் பிஸ்மி கேள்வி எழுப்பியுள்ளது பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.**

நடிகை த்ரிஷா குறித்து அவதூறாக பேசியதற்கு மன்சூர் அலிகானுக்கு திரைத்துறையினர் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்து வருகின்றனர். மேலும், ரசிகர்களும் மன்சூர் அலிகான் செயலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இந்த நிலையில், நேற்று பத்திரிகையாளர்களை சந்தித்த மன்சூர் தான் தவறாக எதுவும் பேசவில்லை எனவும் மன்னிப்பு கேட்க முடியாது என்றும் கூறினார். மேலும், தான் நடிகைகளை பாராட்டி பேசினேன் எனவும் கூறியவர் தனக்கு எதிர்ப்பு தெரிவித்த நடிகர் சங்கத்திற்கு கண்டனத்தையும் பதிவு செய்தார்.

இந்தநிலையில், மன்சூரை கேள்வி கேட்பவர்கள் இதேபோன்றுபேசியரஜினியை ஏன் கேள்வி கேட்கவில்லை என பத்திரிகையாளர் பிஸ்மி கேள்வி எழுப்பியுள்ளார். இதுகுறித்து அவர் பேட்டி ஒன்றில் பேசியிருப்பதாவது, "ஜெயிலர் பட விழாவில் கிட்டத்தட்ட மன்சூர் அலிகான் பேசிய சாயலில் நடிகர் ரஜினிகாந்த்தும்பேசிஇருந்தார். 'தமன்னா 'ஜெயிலர்' படத்தில் நடிக்கிறாங்க. அதனால நான் ஆர்வமா வந்தேன். ஆனா கடைசியில என்னை அவங்க கூட ஆடவே விடல' என ரஜினிகாந்த் பேசியது தவறான எண்ணத்தில்தான்.

அது ரஜினிகாந்தாக இருந்தால் என்ன? மன்சூர் அலிகான் ஆக இருந்தால் என்ன? உங்க மனசுக்குள்ள இந்த மாதிரி பெண்கள் குறித்து கேவலமான எண்ணம் இருக்கிறது என வெளிப்படுத்தும் குணம் தான் அது. அதனால் இது போன்ற பேச்சுகளை யாரும் எந்த காலத்திலும் பேசக்கூடாது " எனக்காட்டமாகபேசியுள்ளார்.

# அஜித், விஜய் ரசிகர்கள் பற்றி மணிரத்னம் பரபரப்பு கருத்து



**சென்னை : நவ. 22,**

**அஜித் விஜய் ரசிகர்கள் சோசியல் மீடியாக்களில் வார்த்தை போரே நடத்தி வருகின்றனர். அஜித்தும் விஜய்யும் ரசிகர்களிடம், இது மாதிரியான சண்டை தேவை இல்லாதது என்றும் தாங்கள் எப்போதும் நல்ல நண்பர்கள் என்பதையும் கூறியுள்ளனர்.**

இருப்பினும் இருவரின் புது படங்கள் ரிலீசாகும் போது, டீசர், டிரெய்லர் வெளியாகும்போது நீயா நானா என்பது போல் ரசிகர்களின் மோதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குனர்களில் ஒருவரான மணிரத்னம் இந்த பிரச்னை குறித்து தன் கருத்தை வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

இயக்குனர் வெற்றிமாறன், மாரி செல்வராஜ் போன்றோர் கலந்து கொண்ட ஓர் நிகழ்ச்சியில் இக்கருத்தை மணிரத்னம் கூறியுள்ளார். அதில் அவர், 'ரசிகர்களுக்கிடையேயான இது போன்ற மோதல்கள் தேவையற்றது. அது உணர்வுபூர்வமாக இருக்காது. சோசியல் மீடியாவில் ரசிகர்கள் மோதிக் கொள்வது தெருவில் சண்டை போடுவது போல் இருக்கிறது. எதிர்மறை எண்ணங்களை தான் சோசியல் மீடியாவில் பகிர்கின்றனர். முக்கியமான விஷயங்களைப் பற்றி விவாதிக்காமல் தேவையற்ற காரணங்களை பெரிதாக எண்ணி மோதிக் கொள்கின்றனர்' என்று தன் கருத்தை தெரிவித்துள்ளார்.



வரலாறு உலகம்

# “இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளது”

## ஹமாஸ் தலைவர் தகவல்



**புதுடெல்லி : நவ. 22,**

**இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளதாக ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தெரிவித்துள்ளது சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.**

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே “இஸ்ரேலுடனானபோர்நிறுத்த ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது” என டெலிகிராமில் தெரிவித்துள்ளார். கத்தார் இருதரப்புகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தி வரும் நிலையில், இரண்டுதரப்பிலும் சுமுக முடிவு விரையில் எட்டப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில். இஸ்ரேல் 5 நாள் போர் நிறுத்தமும், தெற்கு காசா உட்பட காசாவின் பகுதிகளில் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலை நிறுத்தவும் அந்த பேச்சுவார்த்தையில் கேட்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

அதற்குப் பதிலாக, ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் ஆகியோரின் பிணையில் உள்ள 50 முதல் 100 பிணைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் கூறப்படுகிறது. இதில் ராணுவ வீரர்களை வெளியேற்ற வாய்பில்லை எனத் தெரிகிறது. இந்த நிலையில், பிணைக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே விரைவில் உடன்பாடு ஏற்படும் என நேற்று முன்தினம் திங்கள்கிழமை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நம்பிக்கை தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல் நாட்டின் மீது அக்டோபர் 7-ம் தேதியன்று பாலஸ்தீனத்தின் ஹமாஸ் குழு திடீர் தாக்குதலைத் நடத்தியது. அதைத் தொடர்ந்து இஸ்ரேலும் தொடர்ந்து தன்னுடைய எதிர்த் தாக்குதலை நடந்தி வருகிறது. இந்த மோதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்து கிடக்கின்றன. இதற்கிடையே போரை நிறுத்தி காசா மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்ய இந்தியா அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வந்தன. ஆனால், பிணைக்கைதிகளை விடுவிக்கும் வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என் இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு இன்னும் நிரந்தர முடிவு எட்டப்படவில்லை. இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலில் ஏறத்தாழ 1,200 பேர் கொல்லப்பட்டனர். 239 பேரை காசா பகுதிக்குள் கடத்திச் சென்றனர். இதனால், இஸ்ரேல் ராணுவம் காசாவின் வட பகுதியில் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது. கடந்த 40 நாட்களுக்கும் மேலாக நடந்த தாக்குதலில் காசாவில் 13,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

# உலகின் அதிக சக்திவாய்ந்த ராணுவ படை கொண்ட நாடு அமெரிக்கா

## இந்தியாவிற்கு நான்காவது இடம்



**உலகச்செய்தி : நவ. 22,**

**உலக நாடுகளில் பெரும்பாலானவை ராணுவப் படையைக் கொண்டுள்ளன. எல்லைப் பாதுகாப்பு, போர், அவசர மற்றும் பேரிடர் காலங்களில் உதவி என்று வலிமையான ராணுவபடையை உருவாக்குவதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் பிரத்யேகமான தகுதி, கடுமையான பயிற்சி என்று பல நடைமுறைகள் உள்ளன.**

தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு நாட்டின் ராணுவப் படையுமே உரிய பயிற்சிகளுடன் வலிமையாக இருந்தாலும், ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது சில நாடுகளின் ராணுவம் அதிகம் பலம் வாய்ந்ததாக காணப்படுகிறது. சமீபத்தில், மிரர் நவ் வெளியிட்ட செய்தியின்படி உலகிலேயே மிகவும் வலிமையான ராணுவப் படையை கொண்ட நாடு அமெரிக்கா என்று கூறப்பட்டுள்ளது. சரி இந்தியா எந்த இடத்தில் இருக்கிறது?

குளோபல் ஃபையர்பவர் இந்த ஆண்டுக்கான வலிமையான ராணுவப் படையை கொண்ட நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது. 145 நாடுகளில் உள்ள ராணுவப் படைகளின் பலம் பலவீனங்களை ஆய்வு செய்து, இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, இந்த வரிசைப் பட்டியல், கிட்டத்தட்ட 60 காரணிகளில் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலகின் அதிக சக்தி வாய்ந்த ராணுவ படை கொண்ட நாடாக அமெரிக்கா முதல் இடத்தில் இருக்கிறது. இந்திய ராணுவம், இந்தப் பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவை விட மூன்று நாடுகள் வலிமையான ராணுவத்தைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வலிமையான ராணுவம் கொண்ட நாடுகளில், அமெரிக்காவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் ரஷ்யாவும், மூன்றாவது இடத்தில் சீனாவும் உள்ளன. இந்தியா, உலகில் நான்காவது மிகப்பெரிய ராணுவத்தைக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஆண்டும் GFP வெளியிடும் இந்தப் பட்டியல், ஒவ்வொரு நாட்டின் பாதுகாப்புக்கு துணைபுரியும் ராணுவத்தின் பலம் எவ்வளவு என்பதை வெளிக்காட்டுகிறது.

குறைந்தபட்சம் கடந்த 10 ஆண்டுகளாக, மிகவும் வலிமையான மிலிட்டரி கொண்ட நாடாக அமெரிக்கா முதல் இடத்தில் இருக்கிறது. உலக அளவில் மிகப்பெரிய டிஃபென்ஸ் பட்ஜெட் கொண்டது. அமெரிக்கா ராணுவத்துக்கு $761.7 பில்லியன் ஒதுக்குகிறது. கடந்த ஆண்டு GFP பட்டியலுடன் ஒப்பிடும் போது, ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளுமே அதே இடத்தை தக்கவைத்துள்ளன.

இந்தியா 15 லட்சம் செயல்படும் ராணுவ வீரர்களும், 5.94 லட்சம் கோடி ரூபாய் பட்ஜெட்டும் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு 8வது இடத்தில் இருந்த யுனைடட் கிங்டம், இந்த ஆண்டு 5வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. கடந்த ஆண்டு 6ஆம் இடத்தில் இருந்த தென் கொரியா, இந்த ஆண்டும் அதே இடத்தில் இருக்கிறது. 9 ஆம் இடத்தில் இருந்த பாகிஸ்தான் ராணுவம், இந்த ஆண்டு 7ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டு இருந்த இடங்களில் இருந்து ஜப்பான் 8 ஆம் இடத்திலும், ஃபிரான்ஸ் 9 ஆம் இடத்திலும் சரிந்துள்ளது. 10வது இடத்தில் இத்தாலி இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு நாட்டின் ராணுவ யூனிட்டுகளின் தரம், பிரிவுகள், ராணுவ பட்ஜெட், நிதி நிலைமை, லாஜிஸ்டிக்ஸ் திறன், இருப்பிடம், உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. வலிமையான ராணுவம் கொண்ட நாடுகளின் பட்டியலில் கடைசி இடத்தைப் பிடித்திருப்பது, பூட்டான். பலவீனமான ராணுவங்கள் கொண்ட நாடுகளின் பட்டியலில் சோமாலியா, மத்திய ஆப்பிரிக்கா, மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

# உளவு செயற்கை கோளை 3-வது முறையாக ஏவும் வடகொரியா



**வடகொரியா : நவ. 22,**

**வடகொரியா, கடந்த ஆகஸ்டு மாதம், உளவு செயற்கைக் கோளை ஏவியது. ஆனால் அது தோல்வியில் முடிந்தது. பின்னர் அக்டோபரில் 2-வது முறையாக ஏவிய உளவு செயற்கைக் கோளும் தோல்வி அடைந்தது.**

இந்த நிலையில் 3-வது முறையாக உளவுசெயற்கைக் கோளை விண்ணில் ஏவி உள்ளதாக வடகொரியா தெரிவித்துள்ளது. இந்த தகவலை ஜப்பானிடம் வடகொரியா தெரிவித்துள்ளது.

அதன்படி வருகிற 30-ந்தேதிக்குள் உளவு செயற்கைக் கோளை ஏவுவதற்கான தனது திட்டத்தை ஜப்பானிடம் வடகொரியா கூறியதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளது. இது தொடர்பபாக ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா கூறும்போது, வடகொரியா செயற்கைக் கோளை விண்ணில் செலுத்துவதே நோக்கமாக இருந்தாலும், ஏவுகணை தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களின் தொடர் மீறலாகும்.

இது தேசிய பாதுகாப்பை பெரிதும் பாதிக்கும் விஷயமாகும். அமெரிக்கா, தென்கொரியா மற்றும் பிற நாடுகளுடன் இணைந்து செயற்கைக் கோள், ஏவுகணை ஏவுவதை தொடர வேண்டாம் என்று வடகொரியாவை ஜப்பான் வலியுறுத்தும் என்றார்.

## அமெரிக்காவில் மீண்டும் அதிர்ச்சி

# வால்மார்ட் சூப்பர் மார்க்கெட்டில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி, 4 பேர் காயம்



**ஒஹையோ : நவ. 22,**

**அமெரிக்காவின் ஒஹையோ மாகாணத்தில் மர்ம நபர் சூப்பர் மார்க்கெட் ஒன்றில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததோடு, 4 பேர் படுகாயம் அடைந்தனர்.**

அமெரிக்காவில் துப்பாக்கிவைத்திருப்போரின் எண்ணிக்கை அதிகம் என்பதால், அடிக்கடி அங்கு பொது இடங்களில் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடைபெறுவது வழக்கமான நிகழ்வாக மாறிவிட்டது. கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதோடு, ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் ஒஹையோ மாகாணத்தின் போல்வார்டு பகுதியில் செயல்பட்டு வரும் வால்மார்ட் சூப்பர் மார்க்கெட்டில் மர்ம நபர் ஒருவர் உள்ளே நுழைந்து திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இந்திய நேரப்படி நேற்று முன்தினம் திங்கள்கிழமை இரவு நடந்த இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு, 4 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இது குறித்து தகவல் அறிந்ததும் மாகாண போலீஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

அப்போது தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு துப்பாக்கிச் சூடு நடத்தியவர் உயிரிழந்து கிடந்தது தெரியவந்தது. இதையடுத்து நிலைமை கட்டுக்குள் இருப்பதாக அறிவித்துள்ள காவல் துறையினர், இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் துப்பாக்கி கலாச்சாரத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் சட்டங்களை கடுமையாக்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# லெஸ்பியன் ஜோடிக்கு பிறந்த குழந்தை ஈருடலில் ஓருயிரை வாரிசாகப் பெற்றெடுத்த அதிசயம்



**ஸ்பெயின் : நவ. 22,**

**ஸ்பெயின் தேசத்தை சேர்ந்த லெஸ்பியன் ஜோடி ஒன்று, தங்களுக்கான வாரிசை, தங்கள் இருவர் உடலிலும் சுமந்து பெற்றுள்ளனர். திருமண பந்தத்தில் இணையும் தன் பாலீர்ப்பாளர்கள் மத்தியில் இது வரலாற்று மற்றும் அறிவியல் சாதனையாக அறியப்படுகிறது.**

தன் பாலீர்ப்பாளர்கள் திருமணம்செய்துகொள்ளவும், நவீன மருத்துவத்தின் உதவியோடு குழந்தைகளை பெற்றுக்கொள்ளவும் ஐரோப்பிய சட்டங்கள் அனுமதிக்கின்றன. பாலீர்ப்பின் அடிப்படையில் ஒரே பாலின ஜோடிகள் தங்களை பகிரங்கமாக வெளிப்படுத்திக்கொள்ள வாய்ப்பில்லாத உலகின் இதர நாட்டினருக்கு இந்த சம்பவம் வியப்பை அளிக்கக் கூடும்.

ஸ்பெயின் தேசத்தின் லெஸ்பியன் தம்பதிகளான எஸ்டெபானியா (30) அசஹாரா (27) ஜோடி, தங்களுக்கான வாரிசை தங்கள் இருவருமே ஏதேனும் ஒரு வகையில் சுமந்து பிரசவிக்க விரும்பினர். வழக்கமாக ஓரினச்சேர்க்கை தம்பதியரில், இருவரில் எவரேனும் ஒருவர் மட்டுமே தங்கள் வாரிசை உருவாக்குவதில் நேரடியாக பங்கேற்க முடியும். அது கருமுட்டை அல்லது விந்தணுவைதானம்செய்வதன் மூலமாகவோ, செயற்கை கருத்தரிப்பில் உருவான கருவை வயிற்றில் சுமந்து பிரசவிப்பதன் மூலமாகவோ சாத்தியப்படும். ஆனால் ஸ்பெயின் லெஸ்பியன் ஜோடி, தங்கள் வாரிசை இருவரின் உடல்களும் உரிமை கொண்டாட விரும்பினர்.

எஸ்டெபானியா-அசஹாரா ஜோடியின் விருப்பத்தை பூர்த்தி செய்ய, மருத்துவர்கள் 'இன்வோசெல்' என்ற நவீன செயற்கை கருத்தரிப்பு உத்தியை தேர்ந்தெடுத்தனர். இதன்படி ஒரு பெண்ணின் கருமுட்டை மூலம் உருவாகும் கரு, இன்னொருவர் வயிற்றில் சிசுவாக வளர்ந்தது.

'இன்வோசெல்' நுட்பத்தைப் பயன்படுத்தி, முதலில் எஸ்டெபானியாவின் உடலுக்குள் முட்டை மற்றும் விந்தணுக்களின் காப்ஸ்யூல் சேர்க்கப்பட்டது. சில தினங்கள் கழித்து காப்ஸ்யூலின் ஆரோக்கியமான கருக்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்த கருவில் ஒன்று அசாஹாராவின் கருப்பையில் பின்னர் பொருத்தப்பட்டது.

அக்டோபர் 30 அன்று, எஸ்டெபானியா - அசஹாரா ஜோடி தங்கள் மகனை இந்த உலகுக்குவரவேற்றனர். செல்ல மகனுக்கு டெரெக்எலோய்எனப் பெயரிட்டுள்ளனர். தாய்மையை பகிர்ந்து கொண்டதில் தங்கள் சேய்க்கு இருவருமே தாயாகி உள்ளனர். இந்த சிகிச்சைக்கு இந்திய மதிப்பில் சுமார் நான்கரை லட்சம் மட்டுமே செலவாகி இருக்கிறது. மருந்து செலவினங்கள் தனி. லெஸ்பியன் தம்பதியர், கருவைப்பகிர்ந்துகொள்ளவும், கர்ப்பத்தில் ஈடுபடவும் அனுமதித்த வகையில், தங்களது மகப்பேறினை கொண்டாடி வருகின்றனர். இருவரும் தம்பதியாக சேர்ந்து வாழ்வதிலும், வாரிசை சேர்ந்து உருவாக்கியதிலும் தங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்த்துள்ளனர்.

இந்த வகையில் குழந்தை பெற்றவர்களில் ஐரோப்பாவின் முதல் ஓரினச்சேர்க்கை ஜோடியாகவும், உலகில் இரண்டாவது ஓரினத் தம்பதியாகவும் எஸ்டெபானியா - அசஹாரா ஜோடி சாதனை படைத்திருக்கிறது. முதல் சாதனை அமெரிக்காவின் டெக்சாஸை சேர்ந்த ஒரு லெஸ்பியன் ஜோடி, தங்கள் வாரிசை தங்கள் இருவரது உடல்கள் வாயிலாகவும் பெற்றெடுத்தது. 2018-ல் நடந்த இந்த மருத்துவ வரலாற்று சாதனையில் செயற்கை கருத்தரிப்பின் இருவேறு நுட்பங்கள் கலவையாக பயன்படுத்தப்பட்டன.

# ஐஸ்லாந்தில் வெடிக்க தயாராக இருக்கும் எரிமலை மக்கள் அவசர அவசரமாக வெளியேற்றம்



**ஐஸ்லாந்து : நவ. 22,**

**உலகின் 18வது பெரிய தீவாக, வடக்கு அட்லாண்டிக் கடலில் அமைந்திருக்கிறது ஐஸ்லாந்து நாடு. 300-க்கும் மேற்பட்ட எரிமலைகளை கொண்ட இந்த தீவு நாட்டில், நிலநடுக்கம் ஏற்படுவது என்பது கிட்டத்தட்ட அன்றாட நிகழ்வு என்றே கூறலாம். இருந்தாலும், தொடர் பனிப்பொழிவால், எப்போதும் வெள்ளைப் போர்வைபோர்த்தியதுபோல காணப்படும் மலைக்குன்றுகளையும், பள்ளத் தாக்குகளையும் ரசிப்பதற்காகவே, ஆண்டுதோறும் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஏராளம்.**

இந்த நிலையில்தான், ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் கடந்த 10 நாட்களில் 10 ஆயிரம் முறைக்கும் மேல் ஏற்பட்ட நிலநடுக்கம், அப்பகுதி மக்களை தற்போது அச்சுறுத்தி வருகிறது. நிலநடுக்கம் என்பது அங்குள்ள மக்களுக்கு பழகிப்போனதுதான் என்றாலும், கிரிண்டாவிக் பகுதியில் இந்த முறை அது வெளிப்படுத்தும் கோர முகம்தான், மக்கள் அச்சத்தின் உச்சத்தில் இருப்பதற்கு முக்கிய காரணம், பாளம் பாளமாக வெடித்த சாலைகள், ஏவுகணை தாக்கியதுபோல, விரிசல் அடைந்து காணப்படும் கட்டடங்கள் என மக்கள் வாழ்வதற்கே முடியாத இடமாக மாறி வருகிறது கிரிண்டாவிக் பகுதி.

மறுபுறம் தொடர்ந்து வெடித்துச் சிதறி எரிமலைக் குழம்பை வெளியே கொட்டிக் கொண்டே இருக்கிறது அங்கிருக்கும் ஃபக்ரதல்ஸ்பல் எரிமலை. கட்டடங்கள் ஒரு பக்கம் தொடர்ந்து குலுங்கிக் கொண்டே இருக்கும் நிலையில், மற்றொரு புறம் காற்றில் கலக்கும் எரிமலை சாம்பலால், சுவாசிக்கவும் சிரமப்படுகின்றனர் அப்பகுதி மக்கள். எனவே, எப்போது வேண்டுமானாலும் எரிமலை பெரிய அளவில் வெடித்துச் சிதறும் என்ற அச்சத்தால், அவரச நிலையை அறிவித்துள்ளது ஐஸ்லாந்து அரசு.

இதைத் தொடர்ந்து, கொந்தளித்துக் கொண்டிருக்கும் எரிமலைக்கு அருகில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பும் வேலைகளை தீவிரமாக்கியுள்ளனர் காவல்துறையினரும், பேரிடர் மேலாண்மை குழுவினரும். அத்துடன், சுற்றுலாப் பயணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டு, தீவிர கண்காணிப்பில் அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதால், ஆடிப் போய் இருக்கிறார்கள் அங்குள்ள மக்கள்.

# வெடித்தது எரிமலை : சுனாமி ஏற்பட வாய்ப்பு ஜப்பான் வானிலை மையம் ஆய்வு



**பப்புவா நியூ கினியா : நவ. 22,**

**தென்மேற்கு பசிபிக் கடலில் அமைந்துள்ள பப்புவா நியூ கினியா நாட்டில் எரிமலை வெடித்ததால் ஜப்பான் நாட்டின் கடற்கரை பகுதிகளில் சுனாமி ஏற்படும் சூழல் உள்ளதா என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் ஆய்வு நடத்தி வருகிறது.**

பப்புவாநியூகினியாதீவில் உள்ள மவுண்ட் உலாவுன் எரிமலை நேற்று முன்தினம் திங்கள்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வெடித்ததாக ஜப்பான் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சீற்றத்துடன் வெடித்த எரிமலையிலிருந்து வெளியேறிய சாம்பல் நிற புகை சுமார் 50 ஆயிரம் அடி உயரத்திற்கு மேல் எழும்பியதாகவும் தெரிவித்துள்ளது. எரிமலை வெடித்துள்ளதால் ஜப்பான் கடலோர பகுதிகளில் சுனாமி ஏற்படும் அபாயம் உள்ளதா என ஆய்வு நடத்திவரும் ஜப்பான் வானிலை ஆய்வு மையம் கடலோர பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுனாமி ஏற்படும் பட்சத்தில் ஈசு மற்றும் யுகசபாரா தீவுகள் முதலில் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ள போதும் கடலில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி கண்காணிக்கும் மிதவைகளில் எவ்வித மாற்றமும் தெரியாததால் சுனாமி பேரலை எழுவதற்கான வாய்ப்புள்ளதா என கூற முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. பப்புவா நியூ கினியா அரசு எவ்வித அறிவிப்பும் வெளியிடாத நிலையில், ஆஸ்திரேலிய வானிலை மையமும் எவ்வித சுனாமி எச்சரிக்கையும் வெளியிடவில்லை.

# சுரிநாம் நாட்டில் தங்கச் சுரங்கத்தில் விபத்து 10 தொழிலாளர்கள் பரிதாப பலி



**சுரிநாம் : நவ. 22,**

**தெ. அமெரிக்க நாடான சுரிநாமின் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 10 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.**

விபத்துப் பகுதிக்கு காவல்துறை, ராணுவ அதிகாரிகள், மீட்புக் குழுவினர் விரைந்துள்ளனர். விபத்து நடந்தது நாட்டின் தென் பகுதியில். விபத்துக்குள்ளான சுரங்கம் அரசுக்கு சொந்தமானது அல்ல, சட்டபூர்வமானதும் அல்ல. மாறாக சிலர் தாமாகவே இணைந்து தங்கத்தைத் தேடி சுரங்கம் அமைத்து தங்கம் சேகரிக்க முயற்சித்துள்ளனர். அப்போது சுரங்கம் இடிந்துவிழுந்து இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. சுரிநாமில் இதுபோல் மக்களே இணைந்து தங்கம் தேடுவது வழக்கமான சட்டவிரோத நடவடிக்கையாகவே உள்ளது.

இந்நிலையில் விபத்து குறித்து அதிபர் சான் சன்டோக்கி, “சுரங்க விபத்து பற்றி தெளிவற்ற சூழலே நிலவுகிறது. முதலில் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டியது அவசியம்” என்றார். முன்னதாக பட்ஜெட் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் இருந்த அதிபரிடம் விபத்து குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. அப்போது அவர் அங்கிருந்தவர்களிடம் ‘ஒரு துயரச் சம்பவம் நடந்துவிட்டது’ என்றுகூறிவிட்டு ஆலோசனையை பாதியில் முடித்துக் கொண்டார்.

சுரிநாமில் உள்ள தங்கச் சுரங்கங்களில் அமெரிக்கா, கனடா நாடுகள் மிகப்பெரிய அளவில் முதலீடு செய்துள்ளன. அங்கே சமீபகாலமாக சட்டவிரோத தங்கச் சுரங்க செயல்பாடுகள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# மைக்ரோசாஃப்ட்டில் இணைந்தார் சாம் ஆல்ட்மேன்



**புதுடெல்லி : நவ. 22,**

**சாட் ஜிபிடியை உருவாக்கிய ஓபன்ஏஐ நிறுவன சிஇஓ பதவியில் இருந்து நீக்கப்பட்ட சாம் ஆல்ட்மேன் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தில் இணைந்துள்ளார். இதுகுறித்து மைக்ரோசாப்ட் நிறுவன சிஇஓ சத்யா நாதெல்லா, எக்ஸ் வலைதளத்தில் பதிவிட்டுள்ளதாவது:**

சாம் ஆல்ட்மேன் மற்றும் அதன் முன்னாள் தலைவர் கிரெக்ப்ரோக்மேன் ஆகியோர் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தில் இணைந்து செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆராய்ச்சிக்கானபுதியகுழுவை வழிநடத்துவார்கள். ஓப்பன்ஏஐ நிறுவனத்துடனான எங்கள் கூட்டணி தொடரும். அத்துடன் வாடிக்கையாளர்களுக்கு புதுவிதமான தயாரிப்புகளை வழங்குவோம் என்பதிலும் நம்பிக்கை கொண்டுள்ளோம். சாம் ஆல்ட்மேன் மற்றும் கிரெக் ப்ரோக்மேன் ஆகியோருக்கு தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குவோம் என்று சத்யா நாதெல்லா தெரிவித்துள்ளார்.

விண்டோஸ் ஆராய்ச்சி குழுவின் சிஇஓ-வாக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்து சத்ய நாதெல்லாவின் இந்தப் பதிவை ‘‘பணி தொடர்கிறது’’ என்ற வாசகத்துடன் ஆல்ட்மேன் தனது சமூகவலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் மாபெரும் பாய்ச்சலானசாட் ஜிபிடியை உருவாக்கிய சாம் ஆல்ட்மேன் மற்றும் கிரெக் ப்ரோக்மேன் ஆகியோரை ஓப்பன் ஏஐ நிறுவனம் கூகுள் மீட் அழைப்பின் மூலமாகவே நீக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.



# பேரியம் நைட்ரேட் கொண்டு பட்டாசு தயாரிக்க அனுமதியை வழங்குங்கள்

# வைரமுத்துவை மகளிர் ஆணையம் விசாரிக்க வேண்டும்: கோவையில் ஹெச். ராஜா





# அமைச்சர் எ.வ. வேலு பதவி விலக வேண்டும் போராட்டத்தில் குதித்த விவசாயிகள்


| சென்னை / புதுக்கோட்டை | 22.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜல்காரிபாய் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1830) (இ.1858)



முலாயம் சிங் யாதவ் , இந்திய அரசியல்வாதி (பி.1939)



மாவன் அத்தபத்து , இலங்கைத் துடுப்பாளர் (பி.1970)



ஆஸ்கர் பிஸ்டோரியஸ் , தென்னாப்பிரிக்க ஓட்டப்பந்தய வீரர் (பி.1986)



## இன்றைய நினைவு நாள்

சிதம்பரநாதன் செட்டியார் , தமிழகத் தமிழறிஞர், மொழியியலாளர் (பி.1907) (இ.1967)



தி. சதாசிவம் , தமிழகப் பத்திரிகையாளர், திரைப்படத் தயாரிப்பாளர் (பி.1902) (இ.1997)



பி. கோவிந்த பிள்ளை , இந்திய அரசியல்வாதி (பி.1926) (இ.2012)

